12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 13—8—1978 | இதழ் 49

இந்தித் திணிப்பாளர்களின் இரட்டை வேடம்!

1976-ஆம் ஆண்டு நெருக்கடி காலத்திலே ஆட்சி மொழிச் சட்டத்தின் பிரிவுகள் அனைத்திலுமிருந்து தமிழகத்திற்கு முழுமையான விதிவிலக்குத் தந்திருந்தனர். எதிர்த்துப் பேச முடியாமல் தளை பூட்டப்பட்டிருந்த அந்தக் காலத்திலே கூட தமிழ்நாட்டு மக்களின் இந்தி எதிர்ப்பு உணர்வுக்காக மத்திய அரசு அச்சம் கொண்டிருந்தது. அதனல் தமிழகத்திற்கு அத்தகைய விதி விலக்குகள் தரப்பட்டிருந்தன.

ஆனல், அந்த விதி விலக்குகளைத் தமிழ் நாட்டில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களும்-மத்திய அரசு மேற்கொண்டுள்ள மற்ற நிறுவனங்களும்-கடைப்பிடிப்பதாகவே தெரியவில்லை. அந்த விதிவிலக்குகள் முற்றிலும் மீறப்பட்டு வருகின்றன,

அஃதன்னியில் பொதுத்துறை நிறுவனத் தொழிலாளர்கள், இந்தி வகுப்புக்கு வருமாறும், இந்தி படிக்குமாறும் சுற்றறிக்கைகள் அனுப்பப்படுவதோடு, தவறினல் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசின் ஆட்சி மொழித்துறை கட்டளை பிறப்பித்திருக்கிறது.

இந்தித் திணிப்பு இல்லை என்று ஒரு பக்கம் கூறிவிட்டு, இந்தி படிக்காவிட்டால் வாழ்வில்லை என்ற நிலைமையை இன்னெரு பக்கம் உருவாக்குகிற இந்த இரட்டை வேடத்தைத் தமிழ்நாட்டு மக்கள் அனுமதிக்க முடியாது.

—கலைஞர்

புனித ராஜ்யம்

காட்சி-5

[போலீஸ் சூப்பிரண்டெண்டெண்ட் ஆபீஸ். எஸ். பி. ஏதோ கோப்புக்களைப் படித்தவாறு கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார். அப்போது தொலைபேசியின் மணி அடிக்கிறது.]

எஸ் பி : ஹலோ! ஹலோ! நான் எஸ். பி. பேசுகிறேன்...யார் பேசுவது? யாரு? சொக்கியா? என்ன? என்ன வேணும்? ஆ! கொலையா? உங்க தாத்தவா? அண்ணச்சி! நொண்டி! பொடியன்! பேர்களே வேடிக்கையாயிருக்கே! அவுங்கதான் கொலை செய்தார்கள் என்பதற்கு நேரில் கண்ட சாட்சி இருக்கா? ஒகோ. நீயே சாட்சியா? ஊர்மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அடித்துக் கொலை செய்தார்களா? அம்மா சொக்கி!... நான் இப்பவே புறப்பட்டு வர்றேன் உன் அட்ரஸ் என்ன?... கொஞ்சம் இரு, எழுதிக் கொள்கிறேன். (தொலைபேசியைக் காதில் வைத்தவாறே ஒரு தாளில் எழுதிக் கொள்கிறார்.)

சரிம்மா! நான் இப்பவே நடவடிக்கை எடுக்கிறேம்மா...அதெல்லாம் பயப்படாதே.... புனித ராஜ்யம்" நடக்கிறது என்பதை மறந்துவிடாதே! "குற்றவாளிகள் தப்பிக்கவே முடியாது" என்பதுதான் புனிதராஜ்யத்தின் புனித முழக்கம். ஆல்ரைட்! போனைவச்சிடு! நான் ஆக வேண்டியதைக் கவனிக்கிறேன்.

(தொலைபேசியில் பேசி முடித்த எஸ். பி. அவசரமாக எழுந்து தொப்பியை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே போக ஆயத்தமாகிறார். அப்போது மீண்டும் தொலைபேசியின் மணி அடிக்கிறது)

எஸ். பீ. : ஹலோ! ஹலோ! நான் எஸ். பி. பேசுகிறேன், குட்மார்னிங் சார், [எஸ். பி. யின் உடலில்; ஒரு குழைவு; முகத்தில் ஒரு பரபரப்பு]

எஸ் பி : ஆமாம் சார், இப்பதான் ஒரு லேடி டிரங்கால் பேசினங்க சார்! அவுங்க பேரு சொக்கி சொக்கின்னு சொன்னங்க! அவுங்க தாத்தாவாம்— பேரு நல்லானும்! அய்விட்னசே இருக்கு சார்! ஊர் ஜனங்களுக்கு நேராகவே அடிச்சுக் கொலை செய்ததாக... ஆமாம் சார்! எனக்குத்தெரியாது சார். அந்தப் பெண் சொன்னதுதான் சார்! நடவடிக்கை எடுக்க வேண்டாம்னு சொல்றீங்களா சார்? எப்படி சார் முடியும்? மன்னிச்சுடுங்க சார்! தெரியாம பேசிவிட்டேன் சார்! டிரங்காலில் "கம்ப்ளைண்ட்" கொடுத்த பிறகு நாம் பேசாம இருந்தால் சட்டப்படி சரியில்லேன்னு நினைக்கிறேன் சார்! அப்புறம் உங்க இஷ்டப்படியே செய்றேன் சார்! எஸ். சார்... அப்படியே சார்! தேங்க்யூ சார்!

(எஸ். பி. பேசி முடித்ததும் குழப்பத்துடன் தொலைபேசியைக் கீழே வைத்துவிட்டு அங்குமிங்கும் உலவுகிறார்...]

(தனக்குள்ளாகவே) இது என்ன அக்கிரமம்? இவ்வளவு பெரிய அதிகாரி இப்படி ஒரு தவறு செய்யும்படியாகச் சொல்கிறாரே; கொலை நடந்திருக்கிறது. கொலை செய்தவர்கள் யார் என்பதைத் தானே கண்ணால் கண்டதாக அந்தப் பெண் சொல்கிறாள். கொலை நடக்கும் போது ஊர்மக்களும் பார்த்திருக்கிறார்கள்... தடயங்களோ, சாட்சியங்களோ இல்லதா 'கேஸ்' என்றால் கூட இவர் சொல்வது ஒரு வகையில் நியாயம்! ஆதாரபூர்வமான ஒரு கொலை வழக்கை எப்படி மறைக்க முடியும்? சே! என் மனச்சாட்சி என்னைக் கொல்லுகிறதே' என்றால் நியாய விரோதமாக நடக்க முடியாது! அய்யோ! உத்தரவிடுவது பெரிய அதிகாரி அல்லவா?

[தலையில் கைவைத்தவாறு அப்படியே உட்கார்ந்து விடுகிறார். அலுகாரத்தில் மணி ஆறு அடிக்கிறது. ஒரு காவலர் உள்ளே வந்து]

காவலர் : சார்! சார்!

எஸ் பி : (குழப்பத்துடன் திடுக்கிட்டு) என்னப்பா?

காவலர் : சுமார்... மூன்று மணி நேரத்துக்கு மேலாக நீங்கள் என்னைக் கூப்பிடவே இல்லை. அதனால் தான் நானே வந்து பார்த்தேன்... மணி ஆறு.., பொழுது கூட போய்விட்டது சார்!

எஸ் பி : எனக்கு மனதே சரியில்லை. ஒரே குழப்பமாக இருக்கிறதப்பா!

காவலர்: கல்யாண விஷயம் தானே சார்! நேத்திக்கு மாப்பிள்ளை வீடு பார்க்க வந்தாங்களே சார்! அந்தப் பெண்ணும் முடிவாக வில்லையா சார்!

எஸ் பீ. : பெண்ணும் வேண்டாம்- மண்ணும் வேண்டாம்!

காவலர் : சார் நான் சொல்றேன்னு கோபிக்கக் கூடாது! நீங்களும் ஒரே பிடிவாதமா சீர்திருத்தக் கல்யாணம்தான் செய்துக்குவேன்னு ஒத்தக் காலிலே நிக்கக் கூடாது சார்! பஞ்சாங்கம் பார்த்து அய்யரை வச்சே கல்யாணம் பண்ணிக்கிறதா ஒத்துக்கிட்டீங்கன்னு இந்நேரம்... கல்யாணமாகி வீட்டிலே மூணு, நாலு

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)



கலைஞர் கருணாநிதி

★ மொழிகளுக்கெல்லாம் தாய் சமஸ்கிருதமா?

★ தொன்மை மொழிக்குரிய இலக்கணம் என்ன?

★ தமிழின் மறுவடிவமே சமஸ்கிருதம்!

★ உலக முதல் மனிதன் மொழியே தமிழ்!

தமிழே மொழிகளுக்குத் தாய்!

'பிளிட்ஸ்' ஏட்டில் வெளிவந்த மறுப்புக் கட்டுரை!

'பிளிட்ஸ் இதழின் ஜூலை 8-ஆம் தேதிய பதிப்பில் பிரதாப் நஹாதா என்பவர் "சமஸ்கிருதமே மொழிகளின் தாய்" என்னும் கொள்கையை வலியுறுத்தி எழுதிய கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இக்கொள்கை பொதுவாக இந்தியர்களுக்கும், சிறப்பாக சமஸ்கிருத வியலார்க்கும் உகப்பான பெரு விருப்பக் கொள்கையாகும்.

இவர்கள், சமஸ்கிருதம் என்னும் சொல்லின் பொருளையே மறந்து விட்டதுபோல் தோன்றுகிறது இச்சொல்லினை சமஸ் + கிருதம் எனப் பிரிக்கலாம் சமஸ்- செம்மையாக் கிருத். எழுதப்பட்டது எனப்பொருள் கூறுகின்றனர். எனவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு செம்மையாக இல்லாததொரு மொழியிலிருந்து செம்மையாக்கப்பட்டதே சமஸ்கிருதம் என்றாகிறது இச்சொல்லே, இம்மொழிக்கு—சமஸ்கிருத மொழிக்கு—ஒரு தாய் இருந்ததற்குப் போதிய சான்றாக அமைந்துவிட்டது.

மொழியின் ஒலி நிலையை ஆராயும்போது, ஒரே ஒலிக்கு நான்கு வகையான ஒலிவேறுபாடுகள்—(சான்றாக க என்ற ஒலிக்கு Ka Kha gha Igha) அமைந்திருக்கும் நிலை மானிட வரலாற்றின் பிற்காலத்தில், அண்மைக் காலத்தில்தான் அமைந்திருக்க முடியும். தொடக்கத்திலேயே, பிறமொழிகளுக்கு இல்லாத இந்த உயர்ந்த நிலையை சமஸ்கிருதம் அடைந்திருந்தது என்பதே, அது மொழிகளின் தாயல்ல என்பதற்குப் போதிய சான்றாகும். (சீன மொழி இதற்கு விதிவிலக்கு அது வேறு குடும்பத்தின் செம்மொழி என்பதும் சமஸ்கிருதம் மொழிகளின் தாயல்ல என்பதற்குச் சான்றாகும்)

மனித நாகரிகத்தின் தொட்டிலாக, அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆப்பிரிக்காவிலிருந்து தொடங்கிய மானுட வரலாற்றின் நெடும்பயணத்தில் இந்திய ஐரோப்பிய மொழிகள் அண்மையில் தோன்றியவையே என எல்லா மொழியியல் வல்லுநர்களும் கருதுகின்றனர் சமற்கிருதம் இம்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. (மனித நாகரிகத்தின் தொட்டில் இமாலயத்தின் ஸ்வாஹில்க் பகுதியே எனக் கருதும் மானுட இயல் வல்லுநர்களும் உண்டு)

எது தொன்மையான மொழி?

தொன்மை மனிதனின் மொழியாக ஒன்றனை ஒப்புக் கொள்ள அம்மொழி கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

1. அது உலகின் பல பகுதிகளிலும் பரவலாக வழங்கப்பட வேண்டும்

2. மனித இன முன்னோடியின் தொடக்க இடமாகிய ஆப்பிரிக்காவுடன் இடத்தொடர்புடையதாக மெய்ப்பித்துக் கொள்ளுதற்குரிய அடையாளங்களை அம்மொழி பெற்றிருக்க வேண்டும்.

3. வழிபாடு அல்லது மனித முன்னோடி பற்றிய செய்திகளை அம்மொழியில்தேடித்தெரிந்து கொள்ளுதற்குரிய அடையாளங்களை அம்மொழி பெற்றிருக்க வேண்டும்.

4. மிகப் புராதனமானது எனத் தனித்துச் சுட்டக் கூடிய புராணக் கதை அடையாளங்களை அம்மொழி பெற்றிருக்க வேண்டும்.

5. இனம், மக்கள் இடம் ஆகியவற்றைக் குறிக்கும் அம்மொழியின் சொற்கள் பொருளுடையதாக இருக்க வேண்டும். உலகின் ஒரு பகுதியில் மட்டுமின்றி உலகின் பழைய இடங்கள் என வரையறுக்கப்பட்ட இடங்கள் பலவற்றிலும், இத்தகைய சொற்பொருள் தொட்டு அமைய வேண்டும்.

6 மொழிகளின் ஒருங்கிணைப்பு விளக்கத்தைக் காண்பதற்குரிய மூலங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

7. மொழியின் வரிவடிவம் எவ்வாறு உருப்பெற்றது என்பதைக் காட்ட வேண்டும்.

8. மெதுவான வளர்ச்சிப் போக்கினை, கீழ்க் குறிப்பிட்ட வண்ணம் அம்மொழி பெற்றிருக்க வேண்டும்.

டாக்டர் மெ. சுந்தரம்

★ தொல் மனிதன் இடைக்காலப் படி நிலையில் வளர்ந்திருக்கக் கூடிய சில ஒலிகளும் மொழியின் ஒலி வளமும்.

★ மனிதன் மொழியைச் செம்மைப் படுத்த மேற்கொள்ளும் சீர்திருத்த முயற்சி

★ இந்தத் தொடக்கச் சீரமைப்பின் அடிப்படையில் கிடைத்த பட்டறிவின் துணை கொண்டு, மனிதன் மீண்டும், அதனை மேலும் செம்மைப்படுத்திப் பயன் கொள்ளுதல்; சீரமைக்கப்பட்ட மொழி வரிவடிவம் பெறல்.

★ மொழிச் சீரமைப்பிற்கும் எழுத்து நிலையிலான வரி வடிவத்திற்கு முள்ள உறவை தொடக்க கால எழுத்தறிவு மனிதன் எழுதப் பயன்படுத்திய களிமண், ஓலை, இலை ஆகியவற்றை நினைவிற் கொண்டு காணல்.

உலோகம் கல்—எழுத்துக்கள்

மனித வரலாற்றில் அரசுகள் அமைந்த காலக் கட்டத்தில் பட்டயங்களின் தேவையை ஒட்டி உலோகத்திலும் கற்களிலும் எழுத்துக்களைப் பதிக்கத் தொடங்கிய நிலையில், எழுதுதலின் செல்வாக்கு மிகுந்தது.

அடுத்த நிலையில், மனிதன் தன் இனத்தின் நீண்ட வரலாற்றை நினைவிற் கொள்ள வேண்டிய தேவையை ஒட்டி, மொழியைச் செறியுள்ளதாக்க முற்பட்டபோது, குறியீடுகள் தோன்றியிருக்க வேண்டும். இரண்டாவது கட்டத்தில் இருந்து தொடங்கிய மொழி நிலை இவ்வாறு பக்குவப்பட்டிருக்க வேண்டும்.

அடுத்த நிலையே கவிதைக் கலையாகும். (மனிதன் இலக்கிய வழியை ஒழுங்குபடுத்தக் கூடிய உயர்ச்சிக்கு இந்தக் காலக் கட்டத்தில் முன்னேறியிருக்க வேண்டும்)

எனவே இலக்கணம் இந்த நிலையில் உருப்பெற்றதாகக் கொள்ளலாம். இரண்டாம் கட்டத்திலிருந்து இலக்கணத்தின் அடிப்படைக் கொள்கைகள் அமையத் தொடங்கி, காலப் போக்கில் வெவ்வேறு காலகட்டங்களில் பெற்ற மாற்றங்களால் விரிவடைந்து வருகிறது

இலக்கண வளர்ச்சியின் பின்னர், ஒலிவள வளர்ச்சியைப் பெறும் கட்டத்தில்தான், சமஸ்கிருதம் காட்சிக்கு வருகிறது. ஆனால் இதற்கு முன்பே தொடரியல் மாற்றம். குறியீடுகளின் மாற்றம். பல்வேறு இடங்களுக்கு மனித இனங்கள் நகர்ந்து சென்றமையால், அந்த இடங்களுக்கு ஏற்ற மாற்றங்கள் ஆகியவற்றின் விளைவாக மொழி தொடர்புடைய பல கிளை மொழிகளாகப் பெருகியது. இக் கிளை மொழியினர் தம் தாய் மொழியிலும் மாற்றங்கள் ஏற்படுவதை அறிந்திருந்தனர். ஆதலால் கிளை மொழிகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இங்ஙனம் கிளைத்தெழுந்த இனங்களில், மிகவும் அழுத்தமான அறிவு சான்றோரின் செல்வாக்கினால், அத்தகையோர் பேசிய கிளைமொழி பல்வேறு துறைகளில் செல்வாக்குப் பெற்றது. இவ்வாறு மொழிகளின் திரட்சி ஒன்று ஏற்பட்டது இந்த நிலையில் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என மானிட இயலார் ஒத்துக் கொள்ளும், பல இனங்களுள் ஒரு இனத்தின் மொழியாக சமற்கிருதம் தன்னைக் கூறிக் கொள்ளலாம்.

அடுத்து, மொழிகளின் தாயாகத் தன்னைக் கூறிக்கொள்ளும் தகுதிகளை உடைய மொழியைத் தேர்ந்தெடுக்க முற்படும்போது, கீழ்க்கண்ட மொழிகள் போட்டியிடும் தகுதியைப் பெறுகின்றன

1) சீனம் (2, ஹீப்ரு (3, பந்து அல்லது ஸ்ஹாஹிலி (4) சமஸ்கிருதத்தின் தாய் மொழி (5) எகிப்தியம் (6) போனீசியம் (7) சுமேரியம் அல்லது அகாடியம் (8) தமிழ்.

மேலே தெளிவாகக் காட்டிய தகுதிகளின் அடிப்படையில் தேர்ச்சிக்கு உரியதாக ஒரு மொழிதான் உள்ளது அதுதான் தமிழ்.

தமிழ் மொழி ஆப்பிரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆகிய கண்டங்களைச் சேர்ந்த பல நாடுகளில் வழங்கும் மொழிகளுடன் உறவுடையதாக மொழியியலார் குறிப்பிடுகின்றனர் தற்போது கிடைக்கும் மிகப்பழைய தமிழிலக்கியங்கள் எல்லாம் செய்யுள் நடையில் அமைந்தனவாக உள்ளன இந்த இலக்கியங்கள் கீழ்க்கண்ட வரைச் சட்டத்தைப் பின்பற்றுவதில் ஒன்றோடு ஒன்று நன்கு போட்டியிடுகின்றன. அது 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்பது

தற்போது தேடி அறிய இயலாத தொல் பழம நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

சமற்கிருத வியலார் அகத்தியரையே மொழிகளின் மூலமனிதராகக் குறிப்பிடும் பொழுது மனிதனின் அறிவுக் கெட்டிய கால வரையறையைக் கண்டுவிட முடிகின்றது ஆனால்

> கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
> வாளொடு முன்தோன்றி மூத்த குடி

எனக் குறிப்பிடப்படும்.

தமிழ் மரபு பற்றிய செய்தி; தமிழ் அறிந்தறிய இயலாத தொன்மைக் காலத்தைச் சேர்ந்தது என அறிவிக்கின்றது.

மற்றொரு பழம்பாடல் ஈழத்தைப் பற்றிக் கூறுகின்றது. (ஈழம்—இலங்கை) பைபிளில் குறிக்கப்படும் ELAM இச்சொல்லே என நான் கருதுகின்றேன் தமிழில் ஈழம் என்று குறிப்பிடும் இடத்தை இல்லாவிட்டாலும் பைபிளில் குறிப்பிடப்படும் சொல்லும் ஒரு இடத்தைக் குறிக்கும் சொல்லேயாம். மற்றொரு பாடல், துருவநிலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பயணத்தைப் பற்றிப் பாடுகின்றது.

(தொடர்ச்சி 4—ம் பக்கம்)

சாத்தான் வேதம் ஓதுகிறது!

நாம் நினைக்கவில்லை 'குமுதத்தின் தரம் இந்த அளவுக்குக் குறையுமென்று' ஏதோ இவர்கள்தான் தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும் மொத்தக் குத்தகையாளர்கள் என்ற பாணியில் கார்ட்டூன் போடுவதும், தலையங்கம் எழுதுவதுமாக உள்ளார்கள். தமிழக மக்கள் அறியாததா குமுதம்? இந்தக் குமுதத்தின் அன்றைய கதைகளும் இன்றைய குதர்க்கங்களும் யாருக்குப் புரியாது?

அன்று பத்திரிக்கை உலகில் கொச்சையான பச்சைக் கதைகளை எழுதி சிலரின் இச்சைகளை பூர்த்தி செய்து அதனாலே வளர்ந்த பத்திரிக்கை குமுதம் இப்படி வளர்ந்த இந்தப் பத்திரிக்கை இன்று தமிழக அரசியலுக்குத் தானே வழிகாட்டி எனும் தவக்கோலத்தை பூணமுபலுவது விந்தையாகும். அதிலும் தமிழக இந்திரா காங்கிரசுக்கு அறிவுரை கூறும் ஆசானாக எண்ணிச் செயல்படுவதும் விந்தையிலும், விந்தையாகும்.

மகன் செத்தாலும் பரவாயில்லை, மருமகள் மாங்கல்யத்தை இழக்க வேண்டும்' எனும் சிந்தனையில் குமுதம் செயல்படுவது நன்மையுடையதா? நாடு போற்றக் கூடியதா? எனச் சிந்திக்க வேண்டும். சென்ற வார குமுதத்தின் (3-8-78) தலையங்கத்தைப் பார்த்தால் அதன் சிந்தனை ஓட்டம் தெளிவாகத் தெரியும்

மாறிவரும் அன்றுடைச் சூழ்நிலையினை வைத்துப் புதிய கூட்டணிகள் தோன்றுவதும் பழைய கூட்டணிகள் சிதைவதும் இயற்கை என்பதை ஒத்துக்கொள்ளும் குமுதம், ஏனோ தி.மு.க.. இந்திராகாங்கிரசுக் கூட்டணி ஏற்படுவதை வரவேற்கத் தயாராக இல்லை. அப்படி எண்ணுவதையே கசப்பாகக் கூட கருதுகிறது

இன்றைக்கு தி. மு. க. வுடன் கூட்டுச்சேர வேண்டும் என இந்திரா காங்கிரச ஆலோசனை செய்தாலே ஆபத்து என அலறும் இக்குமுதம் தன் பழைய காலத் தரகு வேலைகளை அவ்வளவு விரைவில் மறக்கலாமா?

"இந்திரா காங்கிரசுடன் தயக்கம் இல்லாமல் கூட்டுச் சேரவேண்டும். சேரலாமா? வேண்டாமா? என மதில்மேல் பூனைபோல் இல்லாமல், யார் துணையும் இல்லாமலிருக்கும் இந்திராவுடன் கூட்டு அமைத்துக் கொள்ள வேண்டும். முதறிஞர் இராசாசியின் கூட்டினை முறித்துக் கொண்டாலும் பரவாயில்லை இந்திராவின் அரசு உங்களுக்குத்தான் அதிக செல்லம் கொடுத்திருக்கிறது அதற்காகவாவது ஆதரிக்க வேண்டும் அது இது என்றெல்லாம் ஐஸ் வைத்து "தலையங்கம் விடு தூது" விட்டதெல்லாம் எப்படி மறந்ததோ? அல்லது மறந்தது போல் நடிக்க முடிந்ததோ (குமுதம் 6-8-70 தலையங்கம்)

"கொள்கை ஒருமைப்பாடு இல்லாமல் ஒருவருக்கொருவர் குழிபறித்துக் கொண்டவர்களை கூட்டணியாகக் குழைந்திடும் பொழுது ஒத்தக் கருத்தும் ஒரே நோக்கமும் கொண்டவர்கள் ஏன் ஓர் உடன்பாட்டுக்கு' வரக் கூடாது' எனக் கலைஞர் எழுதிய கருத்தோவியத்தினை 'ரோமாபுரிப் பாண்டியன்' கதையின் தலைப்பில் பெரும் கரும் எழுத்தில் எழுதி இடைத்தரகு வேலை (குமுதம் 4-2-71) செய்ததெல்லாம் ஏனோ நினைவில் இல்லை.

குமுதம் எண்ணுவதையெல்லாம் குறித்து நாம் கவலைப்படப் போவதில்லை அவ்வளவு தூரம் அதை பொருட்படுத்த வேண்டியதுமில்லை. ஆனால் தன் கூற்றுக்கு அது காட்டியிருக்கும் காரணங்கள் வேடிக்கையானவை' விந்தையானவை!

கலைஞரைப் பற்றித் தமிழகம் ஒரு முடிவுக்கு வந்ததாகக் குறிப்பிடும் குமுதம், இந்திராவைப் பற்றி இந்தியா என்ன முடிவுக்கு வந்தது என்பதை எப்படி மறந்தது'

இந்திராவைப் பற்றி இந்தியா கொண்டிருந்த எண்ணங்கள் மாறுவதாக எண்ணும் குமுதம், அதேபோன்று கலைஞரைப் பற்றிய தவறான கருத்துக்கள் எவ்வளவு விரைவில் அழியும் ஒழியும் என்பதை ஏனோ எண்ண மறந்துவிட்டது.

"கூட்டணிகள் மாறக் கூடாது என்பதல்ல நம்கருத்து அம்மாறுதல் லாபம் ஈட்ட வேண்டுமேயன்றி குழி பறித்திடும் தன்மை உள்ளதாக இருக்கக்கூடாது" என சாத்தான் வேதம் ஓதும் குமுதம் 'கூட்டணிகளுக்கு அடிப்படையாக விளங்க வேண்டியது கொள்கைதான் லாபமல்ல (குமுதம் 8-10-70 தலையங்கம்)

என ஒரு முறை வேதம் ஓதியதை எளிதில் மறந்து விட்டது என்ன செய்வது' சாத்தான் அல்லவா வேதம் ஓதுகிறது

"ஆத்திர உணர்ச்சியும் அவசரமும் குமுதத்தின் கூடப்பிறந்த சுபாவங்கள். ஆற அமரச் சிந்திக்காமல் எதிர்கால விளைவுகளைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் — உணர்ச்சிப் பரவசமாகி, ஒன்றை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பது அல்லது

● வீரசோழன் ●

எம் எஸ் சி

யாருடைய கையையும் கோத்துக் கொண்டு எதிர்ப்பது என்கிற கொள்கை அதன் கடந்த கால எதிர்மறைப் போக்கு தொன்று சுபாவத்தின் அடிப்படை"

என நாம் சொல்லவில்லை அவர்கள் யாருக்காக புத்தி தானம் செய்கிறார்களோ. அவர்களோ நவசக்தியில் (19-12-72 லே பே) எழுதியிருக்கிறார்கள்

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. குமுதத்தின் இந்தச் சிந்தனைக்குக் காரணம் கொள்கையோ, கோட்பாடோ, நல்ல எண்ணமோ, நடுவுநிலைமையோ அல்லது நாட்டுப் பற்றோ இல்லை. இதற்கெல்லாம் இதான் ஏதோ ஒரு சுயலாப உணர்ச்சியாக இருக்க வேண்டும். இதற்குச் சான்று இதே இதழில் (3-8-78) காணக் கிடைக்கிறது

அரசுவின் பதிலில் இப்படி ஒரு கேள்வி-பதில் 'ஊழலை ஒழிப்பதே என் லட்சியம் எனும் எம். ஜி. ஆர் ஊழல்காரர்களான நெடுஞ்செழியன் ப. உ. ச. ஆகியோரை அ. தி. மு. க வில் இணைத்துக் கொள்வது சரியா?' இந்தக் கேள்விக்கு அரசு புத்திசாலித்தனமாக(!) பதில் சொல்கிறார். 'நீங்கள் நடுநிலைபாளராஞல் என் பதில்: சரியில்லை. நீங்கள் தி மு. க ஆதரவாளராஞல் என் பதில்: தவறில்லை.

எப்படி இருக்கிறது இந்த நடுநிலைபாளரின் பதில்: ஆளுக்கேற்றவாறு பதிலை எப்படி அனுபசமாக வழங்குகிறார் பாருங்கள். ஊழல் கூட இவர் அகராதியில் (ஆளுக்கேற்றவாறு) தவறில்லாமல்படும் இந்த இலட்சணத்தில் மற்றவர்களுக்கு புத்தி போதனை வேறு சமயத்துக்கேற்றவாறு ஆட்களுக்கேற்றவாறு கொள்கையை மாற்றிக் கொள்வது இக்கருத்துக் குருடர்களுக்கு கைவந்த கலை இதிலென்ன ஆச்சரியம் இருக்கிறது!

★

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25.00

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கோப்புகளே, கோப்புகளே!

[விமர்சகன்]

ஒலிம்பிக் திடல்களுக்குக்
கிலி கொடுக்கும்
எங்கள் தமிழகத்தின்
இன்றைய அரசில்
எவரெஸ்டாய்க் குவிந்துள்ள
கோப்புகளே...

அட்டைக் கட்டில் —இடுப்பில்
நாடாத் துணி
சத்திமுற்றப் புலவன்போல
ஒட்டிக் கிடக்கின்றீர்.

காலம் மாறியது
கட்டுண்டீர் — பொறுத்திருப்பீரா?

எங்கெங்கு தொட்டாலும்
இனிமை தரும்
மங்கையராய் நீங்கள்
இருந்திருந்தால்
இந்த முதல்வர்
திருநீல கண்டராய் இருப்பாரா?

அம்மை வடுப் போட்ட
அருவருப்பு முகங்களோ!
அவர் விழிகள் —உங்கள்
தேகத்தின் தெருக்களிலே
தேரோட்டம் நடத்துமா?

உங்களின் முன்னோர்
பந்தயக் குதிரைகளாய்ப்
பறந்தகதை பழையகதை;
இந்தநாள்
அந்தநாள் கனவுகளை
அசைபோடும் கோப்புகளே!

உங்கள் சிறகசைப்பில்
எங்கள் தமிழர்கள்
ஏதேதோ எதிர்பார்த்தார்!
இருட்டின் நரம்பசைத்துப்
புதியவானம் புதிய பூமிப்
பூபாளம் பாடியவர்
பட்டப் பகலில் உம் சிறகைப்
படக்கென்று கத்தரித்துப்
பேட்டடைத்தார்
கோட்டைக் கூண்டுக்குள்.
'அழுக்கு விரிப்பின்மேல்
அதிகநாள் கிடந்தோம்
புரண்டு படுப்பதற்கும்
முடியாமல்
படுக்கைப்புண் உடம்பெல்லாம் —
எழுத்தெலும்பு தேய்கிறது!
என்றெல்லாம் புலம்பாதீர்!'
கோப்புகளே'
கோட்டைக் கொப்புறத்தில்
'கலை'யுலக —சிரோன்மணி
உங்கட்கோர்
சிலைவைப்பார்.
திவசம் கொடுப்பதற்குத்
தனியமைச்சர் — அவருக்கோர்
துணையமைச்சர்
நியமனம் நிச்சயம்தான்!

M.K. TRADERS MK MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணைமுறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

இந்தித் திணிப்பும் மீறப்படும் விதிகளும்!

மாநிலங்களில் செயல்படும் மத்திய அரசின் அலுவலகங்கள் - தங்களுடைய பெயர்ப் பலகைகள்... கடிதத்தாள்கள் — முத்திரைகள் ஆகியவற்றில் ஆங்கிலத்தையும் இந்தியையும் பயன்படுத்தலாம் என 1976-ம் ஆண்டின் ஆட்சிமொழிச் சட்டத்தின் விதி கூறுகிறது என்ற போதிலும் — இந்த விதியானது தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது எனவும் அதே ஆட்சிமொழிச் சட்டம் கூறுகிறது' இந்த விதிவிலக்கை மத்திய அரசின் அலுவலகங்கள் பொருட்படுத்துவதாகவே தெரியவில்லை. தமிழை முற்றிலும் புறக்கணித்து விட்டு, அந்த அலுவலகங்கள் தொடர்ந்து இந்தியைப் பயன்படுத்தி வருகின்றன.

அதே போல் —

மாநிலங்களில் இருக்கும் மத்திய அரசின் அலுவலகங்களில் பணியாற்றும் பெரும்பாலானவர்களுக்கு இந்தி தெரிந்திருந்தால், கடிதப் போக்குவரத்தை இந்தியிலும் வைத்துக் கொள்ளலாம் என ஆட்சிமொழிச் சட்டத்தில் விதி உள்ளது

ஆனால், இந்த விதியும் தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது என்று அதே சட்டம் கூறுகிறது

இந்த விதிவிலக்கும் மீறப்பட்டு இப்போது தமிழ்நாட்டிலிருக்கும் மத்திய அரசின் அலுவலகங்கள் இந்தியில் கடிதப் போக்குவரத்துக்களை நடத்துகின்றன

மத்திய அரசிடமிருந்து அதன் அலுவலகங்களுக்கு இந்தியில் வரும் கடிதங்களுக்கு இந்தியிலேயே பதில் அளிக்க வேண்டும் என்ற விதியும் தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது.

ஆனால்

இந்த இல்லாத விதியை இப்போது தமிழ்நாட்டிலிருக்கும் மத்திய அரசின் அலுவலகங்கள் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றி மத்திய அரசிடமிருந்து வரும் கடிதங்களுக்கு இந்தியிலேயே பதில் அளிக்கின்றன

இந்தி பேசாத - தெரியாத - பணியாளர்கள் மீது மத்திய அரசு மெல்ல மெல்ல இந்தித் திணிப்பு' என்ற பெரும் சுமையை ஏற்றி வருகிறது இதனால் ஏற்படப்போகும் விளைவுகளை மத்திய அரசு கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

முப்பெரும் தத்துவ டாலர் செயின்கள்

மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் "மணிவாசகம்" பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் சிலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானால் ரூ. 3 அட்வான்சும். செயினுடன் டாலர் வேண்டுமானால் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினால் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : **சக்தி. ஜி சம்பந்தன்**
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

தமிழே மொழிகளுக்குத் தாய்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழில் 900-தொள்ளாயிரம் என்றும்

9—ஒன்பது என்றும் குறிக்கப்படுகின்றன. தொல் — பழைய ஆயிரம்.

ஒன் — பழைய: பத்து எனப் பிரித்துப் பொருள் காணும் பொழுது 0' வழக்கிற்கு வருமுன் 9 தான் பத்திலக்க உயர்ந்த எண்ணை இருந்தது என்பது தெரியும். கணித இயலின் இத்தகைய பழைய செய்தியை அறிந்து கொள்ள உதவும் மொழி எவ்வளவு பழைமையானதாக இருந்திருக்கும் என அறிந்துணரலாம்.

தமிழின் பழைய இலக்கணம் ஐந்திறம் (ஐந்து — திறம்) அதற்கெயம் அதற்குப் பிந்தையதே. அதன் பின் எழுந்த தொல்காப்பியத்தை ஒட்டியே இன்றைய அளவுங் கூட இலக்கணம் அமைந்து வருகின்றது

தொல்காப்பியம் மொழியின் ஐந்து திறங்களையும் (அதாவது எழுத்து சொல் பொருள், யாப்பு, அணி) விளக்குகின்றது எனக்குத் தெரிந்தவரை சமஸ்கிருதத்தை உள்ளிட்ட எந்த மொழியிலும் இவ்வளவு ஆழமான இலக்கண அடிப்படை இல்லை தமிழ் மாணவர் அனைவரும் முச்சங்கங்களைப் பற்றியும் கடற்கோளினால் அவை இடம் பெயர்ந்ததைப்பற்றியும் அறிவர் (வாமன அவதாரம் மூன்று படிநிலைகளைக் குறிப்பிடுகின்றது.)

மனிதனின் தோற்றத்தைப் பற்றியும், மனித இனங்களைப் பற்றியும் பேசும் ஒரே தொன்மையான மொழி தமிழே என நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார். தமிழ்ச் சொற்கள் பொது மரபுக்குழு மற்றும் இனங்களின் எண்ணிக்கையையும் கூட அறிய உதவுகின்றன.

ஓம் திரிமூர்த்தி யக்ஞா முதலிய சொற்கள் இந்து மதத்தின் தூண்களாகக் கருதப்படுகின்றன சமஸ்கிருதச் சொற்களாகத் தவறாகக் கூறப்படும் இச் சொற்களுக்குரிய வேர்ச் சொற்கள் தமிழில்தான் உள்ளன

ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை ஒன்றில் காணப்படும் சொற்களைப் படித்தறிய வேண்டுமானால் தமிழிலக்கியப் பயிற்சி இருந்தால்தான் முடியும் என்பது தெளிவாகி இருக்கிறது. (அம் முத்திரை மொழிகளை விளக்கி சங்க இலக்கியத்தோடு அதற்கு இருக்கும் தொடர்பினை விளக்க வேண்டுமானால் பத்துப் பக்கங்கள் எழுத வேண்டியிருக்கும்) இந்து மதத்தின் தூண்களாகக் கருதப்படும் ஹரப்பா சொற்களின் மூலச் சொற்கள் சமஸ்கிருதம் என்று எவரும் இனிமேலும் கூறவியலாவண்ணம் அச்சொற்களின் மூலத்தைத் தமிழ் கொண்டுள்ளது அங்கு வாழ்ந்த முன்னோடிகளோடும் தமிழின் தொடர்பு தெளிவாகியுள்ளது.

இந்தியன் என்ற சொல்லைக் கூட, சமஸ்கிருத மொழி விளக்க இயலாமலுள்ளது ஆனால் தமிழ் முறைப்படி இச் சொல்லை, இன் - தீயன் எனப் பிரிக்கலாம். இன் - இனிமையான தீயன் — நெருப்பின் மக்கள்

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்றே பொருளிருப்பதும் இங்கு உடன் கருதத் தக்கதாகும்.

வானியல் தொடர்பு

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உலகின் பல பகுதிகள் தமிழ்ப் பெயர்களாக அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது தற்பொழுது வழங்கும் பல நாட்டுப் பெயர்களைத் தமிழ்ச் சொற்களின் வழி விளக்கலாம். சான்று : Zaire — சேயர் — குழந்தை மக்கள். காங்கோவில் வாழும் 'பிக்மி; இனமக்களின் பெயர் Zaire என்பதாகும். மற்றொரு சொல்லைக் காண்போம். Tanganqika — தங்கம் + இய்கன் — தங்கம் கொடுப்பவர். காங்கோ மக்களின் ஒருஇனம் 'BAMBITHI' என்பவர். இதை பம்பு — தீ எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். பாம்பின் மக்களைப்பற்றிய விளக்கம் இது. பாம்பு பற்றிய குறியீடு உலகின் எல்லா பழைய எழுத்து மூலச் சான்றுகளிலும் காணப்படுகின்றது ஆனால் தமிழ் வழி உணரும் இந்த உண்மையான விளக்கத்தை அறியாமல் இக் குறியீடு நிலத்தில் தங்கிவிட்ட ஒரு நட்சத்திரம் எனத் தவறாக விளக்கப்பட்டுள்ளது

பழைய சீன நூலாகிய I Ching பல தமிழ்க் குறியீடுகளைப் பெற்றுள்ளது.

Nazca எனக் கிரேக்கத்தில் குறிப்பிடப்படும் சொல்லின் மூலச் சொல்லும் தமிழே. நாழிகை எனக் கால அளவைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லே இது Nozca என்ற கிரேக்க வழக்கில் கதிரவனைக் குறிக்கும் குறியீட்டுச் சொல் குரங்கு தமிழில் 'மந்தி' எனக் குரங்கைக் குறிக்கும் சொல்லுக்குக் கதிரவன் என்னும் பொருளும் இருக்கின்றது. வானியல் தொடர்பான பல தமிழ்ச் செய்யுட்களில் இச்சொல் கதிரவனைக் குறிக்கக் கையாளப்பட்டுள்ளது

இவ்வாறு, தமிழே உலகின் மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி என அறியத்தக்க சான்றுகளை மேன்மேலும் காட்டிக்கொண்டே இருக்கலாம். சமஸ்கிருதம் என்பது, தமிழின் மறுவடிவமே (REFORMED TAMIZH) சமஸ்கிருதத்தில் காணப்படும் மிகப் பல தமிழ்த் தொடர்களின் அடிப்படைத் தன்மையை அறியாத சமஸ்கிருதவியலார், தமிழ் சமஸ்கிருதத்திலிருந்து வந்ததாகத் தலைகீழாக மாற்றிக் கூறினர். இதனால், (தமிழின் தொன்மைத் தன்மையும், சமஸ்கிருதத்திற்கும் அது அடிப்படையாக இருப்பதும் மறக்கப்பட்டு) பல ஐரோப்பியர்கள் ஆரியம் தமிழ் எனத் தனித்தனிப் பாகுபாடுகளைச் செய்து குழப்பினர் — இதுவே ஐரோப்பியர்கள் செய்த செம்மையான தவறுதும். ஆரியன் என்ற சொல்லை, தமிழின் வேர்ச்சொல்லிலிருந்து விளங்கிக் கொள்ள வேண்டியதென்பது தமிழ் அறிஞர்களுக்கே கூட வியப்பைத்தரும். இதன் வேர் அறி — அ என்னும் குறில் ஆ என நெடிலாக மாறும் அறி — என்பது அறிவு சான்ற என்ற பொருளை ஐயமின்றித் தருகின்றது.

எகிப்திய ரோசெட்டா கல் (Egyptian Rosetta stone ஒரு தமிழ் ஆவணமாகக் கொள்ளத் தக்கதாகும் இவ்வாறே மைனோவன், ஏஜியன், சுமேரியன் எகிப்தியன் நாகரிகங்கள் [அட்லான்டிஸ் நாகரிகமும் இதற்கு விதிவிலக்கல்ல] எனப்படும் பல்வேறு நாகரிகங்களும் தமிழ்க் கூறுபாடுகளைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு பல நாகரிகங்களுக்குக் கொடையளித்த ஒரு நாகரிகம் —

எல்லாவற்றிற்கும் தொன்மையான நாகரிகம் — உலகின் முதல் மனிதன் என்ற பெருமையைப் பெற்றுள்ள நாகரிகம் — தமிழ் நாகரிகமே யாகும்.

— பிலிட்ஸ் 5—8—78-ல் வெளியான கட்டுரையின் மொழி பெயர்ப்பு.



கி. மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை தமிழ் வரிவடிவம் படிப்படியாக பெற்றுள்ள வளர்ச்சி நிலையை மேலே காணலாம்.

வேதனையிலும் விழாவா?

மதுரையிலே தேர்தல் விழுப்புரத்திலே கலவரம்!

தான் நடித்த படங்களின் பேனர்களைத் தெரு வழியே கொண்டு சென்றாலும் மக்கள் மயங்கி வாக்களித்து விடுவார்கள் என்ற நிலைமாறி, மதுரையிலே தெருத்தெருவாக ஜீப் ஊர்வலம் நடத்தி, நரித்தந்திரங்கள் பலவற்றைப் புரிந்து, பகீரதப்பிரயத்தனத்தினால்தான் 'மதுரை வெற்றி' கிடைத்தது என்ற உண்மையைப் புனிதர் உணர்ந்துதானிருக்கிறார். என்றாலும் வரப்போகும் தேர்தல்களில் 'மதுரையைக் காட்டி மற்ற ஊர்களில் வெற்றி வாகை சூடிக்கொள்ளலாமென்று எண்ணியிருந்த எண்ணத்தில் மண்விழும் விதமாக அல்லவோ விழுப்புரம் சம்பவம் நடந்து விட்டது' என்ற மனவேதனை அவருக்கு ஏற்படத்தான் செய்கிறது.

கோட்டையிலே அமர்ந்து தொலைபேசி வாயிலாக விழுப்புரம் சம்பவத்தை அறிந்து கொள்கிறார். ஆனாலும் சேத விவரம் கிடைக்கவில்லை என்கிறார், பல நாட்களுக்குப் பின்னாலும்!

பேட்டி காணவரும் நிருபர்களிடமும் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளிக்கிறார்.

'இந்தச் சம்பவத்தைப் பெரிது படுத்தி விடாதீர்கள்' என்று பத்திரிகையாளர்களைக் கேட்டுக்கொள்ளுகிறார் டெல்லிக்கும் இந்தத் தகவலெட்டி நாடாளுமன்றத்திலே இந்திய தலைமையமைச்சர்கவனக்குறைவால் இது ஏற்பட்டது என்று விளக்கம் தருகிறார்.

"அவருக்கு யாரோ தவறான தகவலைத் தந்து விட்டார்கள்" என்று எரிந்து விழுகிறார் புனிதர்!

'இவராவது நேரில் சென்று வந்தாரா என்றால் அதுவுமில்லை' ஊருக்குப் பயந்து இரு அமைச்சர்களை அங்கு அனுப்பி வைத்தார்.

சென்றவர்கள் பாதிக்கப்பட்டவர்களை நேரில் கண்டிடாமல் பயணிகள் விடுதியில் தங்கி அதிகாரிகளை மட்டும் சந்தித்து விட்டு திரும்பி இருக்கின்றனர்.

நிருபர்கள் இதைச் சுட்டிக்காட்டிக் கேட்டபோது அங்கு சந்திக்க யாருமில்லை' என்றல்லவா கூறியிருக்கிறார்! பின்னால் 'விழுப்புரத்தில் சகஜ நிலை திரும்பி விட்டது. கடைகள் திறக்கப்பட்டுள்ளன சினிமா நடக்கிறது' மக்கள் சினிமா பார்க்கிறார்களென்றால் அங்கு சகஜநிலை திரும்பி விட்டதாகத் தானே அர்த்தம்?' என்று திருப்பிக் கேட்டதும் மக்களின் அமைதி வாழ்க்கைக்கு சினிமா ஒரு அளவுகோலா என்று நிருபர்கள் தலையைச் சொரிந்து கொண்டனர்.

தமிழக மக்கள் இன்னலுக்காளாகும் போதெல்லாம் அவர்கள் பிரச்சினையில் அக்கறை கொண்டு தொண்டாற்றும் தி மு கழகம் வாளாவிருக்கவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைக்க இருபத்தைந்தாயிரம் ரூபாயை உடனடியாகக் கொண்டு போய்க் கொடுத்தார் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்.

மக்களின் உள்ளங்களில் நிறைந்துவிட்ட பாசமிகுந்த தலைவர் கலைஞர் அவர்கள் முன்னறிவிப்பின்றி சென்றிருந்த போதிலும் மக்கள் திரண்டு வந்து தங்கள் உள்ளத்து வேதனைகளைக் கண்ணீர் பொங்கக் கூறி அழுதிருக்கின்றனர்.

கடந்த காலங்களில் எதிரிகளின் சூதுகள்—சூழ்ச்சிகள்—சோதனைகளுக்கெல்லாம் கூட மனங் கலங்காத தானைத் தலைவர் மக்களின் துயரக் கதையை நேரில்கேட்டுக் கண் கலங்கியிருக்கிறார்.

★★★★★★★★★★★

குடி யரசு
சுப்பிரமணியம்

★★★★★★★★★★★

வேதனைக்குள்ளான மக்களுக்கு கலைஞரின் வருகையும் அவர்கூறிய ஆறுதலும முதல் உதவியாகவே அமைந்திருந்தன.

'கலவரம் நடந்த பகுதிகளுக்குச் சென்று கலைஞர் மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறியிருக்கிறாரே அதுபோல் நீங்களும் செல்லப்போகிறீர்களா? என்று கேட்டிருந்தால் "பலநூறு உயிர்களைப் பலி கொண்ட தென் மாவட்டப் புயலுக்கே நான் உடனடியாகச் செல்லாமல் விமானத்தில் சென்று தொலைநோக்கிக் கண்ணாடி வழியே கண்டு வந்தேனே" என்றுதான் கூறியிருப்பார் எம் ஜி ஆர்.

அந்த வெறுவதமாற்றி "வெண்மணி சம்பவத்தின் போது அண்ணா கருணாநிதியைத்தான் அனுப்பினார் அண்ணா செல்லவில்லை, அதனால் நானும் செல்லவில்லை' என்று தானே கூறியிருப்பார் என்று நினைக்கிறீர்கள்? ஆகா! இதுவல்லவா அண்ணாயிசம்! அவர்கள் நினைத்திருக்கலாம். அப்போது அண்ணா அவர்கள் கடுமையான வயிற்று வலிக்கு ஆளாகிப் படுக்கையிலிருந்தது இவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

கடைசியாகக் கேட்டார்களே ஒரு கேள்வி; வந்ததே கோபம் முதல்வருக்கு!!

"நீங்கள் எப்போது வெளிநாடு செல்லப் போகிறீர்கள்?

"கருணாநிதியைப் போய்க் கேளுங்கள். நான் எப்போது வெளிநாடு போவேன்; எப்போது மதுரையிலிருப்பேன் என்பதெல்லாம் அவருக்குத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

கை விலங்குக்கு விடுதலை கிடைக்குமா?

எதற்காக ஒருவருக்குக் காவலர்கள் கைவிலங்கிட வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை கடந்த பல ஆண்டுகளாகக் கைவிலங்கிடுவதைக் காவலர்கள் பழக்கமாக்கிக் கொண்டார்கள். இது முற்றிலும் தவறு மனிதத் தன்மையற்றது! இனி மேல் கைவிலங்கிடுவது அறவே நிறுத்தப்படும்.

—தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய்

காலம் மறவாது

வந்தவர்க் கெல்லாம் வாழ்வு தந்தவன்
வாடிக் கிடப்பதுவோ'-அட
வந்தவன் இங்கே வாழ்வைத் தந்தவன்
வாழ்வை முடிப்பதுவோ!
உத்தமன் போலவே ஊரில் நடிக்கிறான்
உண்மை புரியலையா?- நாளும்
புத்தனைப் போலவே போதனை செய்கிறான்
பித்தம் தெளியலையா?
குப்பைக் காகிதம் கோபுரம் ஏறினால்
கலசம் ஆவதுவோ - உன்றன்
உப்பைத் தின்றவன் உன்னை ஏசினால்
உயர்ந்தவன் ஆவதுவோ'
பாலுக்குப் பூனை காவல் என்றால்
ஞாலம் ஏற்பதுவோ'- என்றும்
காலுக்குச் செருப்பாய் உழைப்பவன் தொண்டைக்
காலம் மறப்பதுவோ!

—நெ. அ. பூபதி

யாருக்குச் சுதந்திரம்?

'கலைமாமணி கவிஞர் கு. மா. பாலசுப்பிரமணியம் எம். எல். சி,

செக்கினில் மாடுபோல் ஏழைமக்கள், வேர்வை
சிந்திட வீதியில் பாரவண்டிதனை
முக்கி இழுக்கையில் மந்திரிகள் கண்ணை
மூடியே காரினில் ஓடுகி— எங்கள்
சொக்கனும் சொக்கியும் சோறுக்கே ஏங்கையில்
சொதந்தரச் சுதந்திரம் யாருக்கடா?

கன்னி பலரும் வறுமையினால் மானங்
காத்திடக் கந்தைச்சும் வாடி நிற்க, நகை
மின்னும் சீமாட்டியர் பெட்டகத்தில், விலை
மீறும் பட்டாடை அடுக்கின்றார்! — ஏழைப்
பொன்னனும் பொன்னியும் பொங்கலுக்கேங்கையில்
போதல் சுதந்திரம் யாருக்கடா?

சிற்றுண்டிச் சாலையின் வாசலிலும், புகை
சீறிட ஓடும் ரயில்களிலும், பக்தி
முற்றி முழங்கிடும் கோவிலிலும் பிச்சை
முற்றுகை சற்றும் குறையவில்லை' — ஆனால்
வெற்றி பெற்றோமென்று வாய்வீச்சு வீசிடும்
வெட்டிச் சுதந்திரம் யாருக்கடா?

—"பொன்னி" மலர்-1; இதழ்-7. (ஆகஸ்டு 1947

ஃ ஃ ஃ

....இப்படி ஆயிரத்துத் தொளாயிரத்து - நாற்பத்
தேழாண்டின் ஆகஸ்டுத் திங்களிலே—மக்கள்
செப்பும் விடுதலை நாளன்று பாட்டொன்றைத்
தீட்டி வைத்தேன் 'பொன்னி" ஏட்டினிலே'
— இன்று
முப்பத்தோராண்டு முடிவினிலும், என்ன
முன்னேற்ற மென்பதைச் சிந்திக்கிறேன்! —இன்னும்
அப்படியே நிலை நீடிப்பதால். இங்கே
ஆளவந்தார்களை நிந்திக்கிறேன்!

கட்சி வளர்க்கத்தான் ஆட்சிகளா? — தன்னைக்
கால்பணிவோர்க்கே பதவிகளா? — மற்றோர்
அச்சமுறப் பொய் வழக்குகளா? —இதற்-
காகத் தான் மக்கள் வரிப் பணமா? — தினம்
எச்சில் உதவிக்கே மெச்சும் துரோகிக்கெலாம்
இட்டு நிரப்பிய பின்னாலே மீதி
மிச்சம் இருப்பதால் நாடுவளம்பெற
மேலான திட்டம் முடிந்திடுமா?

காந்தியை நேருவை காமராஜ் அண்ணாவைக்
காட்டி அழைப்பதே வேடிக்கையா?— அன்னார்
ஏந்திய கொள்கைகள் ஏற்று முடிக்காமல்
ஏய்த்துப் பிழைப்பதே வாடிக்கையா?
வாழ்ந்தோரே வாழச் சுதந்திரமா? —முன்னம்
தாழ்ந்தோரே சாகச் சமத்துவமா?—இங்கே
வீழ்ந்தோர் எழுந்திட விதிசெய்யா மூடர்கள்
வெற்றிச் செருக்கு நிலைத்திடுமா?

ஒப்புடன் ஆட்சிக்கு வந்தவர்கள், முன்னாள்
ஊராண்டவர்களின் பேரழிக்கப் பழங்
குப்பை கிளறியே காலங்கழித்திடில்
கொற்றம் நடத்தவும் நேரமுண்டோ?— பிறர்
தப்புக்களைப் பற்றிப் பேசிக் கொண்டே, இவர்
தப்புவதற்கே சுதந்திரமா? — வாழ்வ—
தெப்படி யென்றே தெரியாமல் திண்டாடும்
ஏழையர்க்காகச் சுதந்திரமா?

தொடர்கதை



சந்தனத்தின் பிடியிலே சிக்கிய செல்வம், துடித்துப் போய்விட்டான். தந்தையின் அன்பான அணைப்பைப் பெறலாம் என்று இருந்த அவன், அழுத்தமான இரும்புப் பிடியிலே அகப்பட்டுத் திணறினன். அவன் கண்கள் நீர் நிலைகளாயின. அப்பா! அப்பா! என்று அலறியபடியே சந்தனத்தின் முரட்டுத் தாக்குதலுக்கு ஆட்பட்டான். மரங்கள் சூழ்ந்த ஒரு இருட்டு மண்டபம். நிலவின் ஒளியையும் உள்ளேவிடாமல் தடுக்கும் நெடிய தெருக்களின் ஓரத்திலே ஒரு குட்டிச்சுவர். அந்த சுவரின் மீது செல்வத்தை வீசியெறிந்தான் சந்தனம். குத்து விளக்கைக் குடும்பத்துப் பெண்கள் அன்பும், பக்தியும் வழிந்திட எடுத்து நடப்பார்கள். ஆனால் ஏற்றிய விளக்கைக்கூடத்தில் வைத்திட எடுத்துச்செல்லும் போது, கைதவறி எண்ணெயும் எரியும் திரியும் கையிலே விழுந்து விட்டால், நல்ல விளக்கென்றும் பாராமல் திடீரெனப்போட்டு விடுவார்கள். அதே போலத்தான் சந்தனம், தன் அருமைச் செல்வன் செய்த தவற்றின் காரணமாக அவன் மீது வைத்திருந்த அன்பையெல்லாம் மறந்துவிட்டு குட்டிச்சுவரின் மீது குமார செல்வத்தை வீசியெறிந்தான்—குடும்பத்துப் பெண்ணாள், குத்துவிளக்கை எறிந்ததைப் போல! சுவரின் கீழ்த்தளத்திலே குப்புற விழுந்த செல்வம், குமுறும் நெஞ்சுடனே எழுந்து நின்றான். அவனும் தந்தையை ஒருகணம் மறந்தான். கோபக்கனல் அவன் விழிகளைப் பொத்துக் கொண்டு புறப்பட்டது. மரக்கிளை-இலை-தழைகளின் இடுக்கின் வழியாக எட்டிப் பார்த்து வெள்ளிச் சிரிப்புக் காட்டும் நிலவொளி, செல்வத்தின் முகத்தைச் சந்தனத்திற்கு எடுத்துக் காட்டியது. சந்தனம் உடலெல்லாம் நடுங்கிட, முகமெல்லாம் பயங்கரக் கீரல்கள் விழுந்திட உறுமினான் மகனைப் பார்த்து!

"கல்வி கற்கும் அழகு நன்றாயிருக்கிறதடா! காதல் நாடகம் நடத்தவா இங்கு வந்தாய்! அறிவு மனம்பெற வந்தவனுக்கும் அர்த்தராத்திரிப்படிப்பு. விவேக சிந்தாமணியை அழைக்க வந்தவனுக்கு விரகதாப சிந்தாமணியின் அணைப்பு. அறிவு பெறுவாய் என்று உன்னைக் கல்விச் சாலைக்கு அனுப்பினால் நீ காம வேள்வி நடனச் சாலைக்குக் கால்கடுக்க ஓடுகிறாய்! இவ்வளவு கஷ்டப்பட்டுக் காதல் காவியமா படிக்க வந்தாய் முட்டாளே!"

தந்தை பேசும் வரையில் மௌனமாக நின்று கொண்டிருந்தாலும் கூட, ஏதாவது பதிலுக்குச் சொல்லிவிட வேண்டுமென்றுதோன்றிற்று அவனுக்கு. அப்படி சொல்லக் கூடாதென்றும் எண்ணினான் அவனையும் மீறி சில வார்த்தைகள் குதித்து விட்டன. பிறகென்ன; அணையிலே சிறு வெடிப்பு கண்டால் பெரு வெள்ளம் தானே!

"காதலுக்கும் படிப்புக்கும் சம்பந்தமில்லை".

"அதனால்தான் கேட்கிறேன்; அறிவு கெட்டதனமாய் ஏன் நடந்தாய் என்று; உனக்கென்னடா தெரியும் காதலைப்பற்றி!"

"தெரியும்-வாலிப உள்ளத்தின் வசிகர ஓவியம் காதல்; வாடிப்போன வயோதிக இருதயங்களுக்கு அதன் பெருமை தெரியாது!"

சந்தனத்திற்கு ஆத்திரமான சிரிப்பு வந்துவிட்டது காதலைப் பற்றிய உண்மையை, தன் மகனே தனக்கு சொல்லும்போது ஒரு தந்தைக்குச் சிரிப்பு வரத்தானே செய்யும் அதுவும் அந்த நிலைமையில் எரிச்சல் கலந்த சிரிப்பு வருவதில் என்ன வியப்பு சந்தனம் சிறிதுநேரம் அப்படியே நின்றான். அந்த அரைகணத்திலே அவன் இருதயத்திலே ஒரு பெரும் போராட்டம் நடைபெற்றுத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் கொஞ்சம் இறங்கி வந்து பேசியிருக்கத் தேவையில்லை அது என்ன போராட்டமாக இருக்கும்!

"அப்பயா பாவம்--இளைனுக்கு என்ன தெரியும் காதலைப்பற்றி. இளமை, பாம்பையும் தூக்கி விளையாடும் பருவமாயிற்றே; பெரிய பெரிய மனிதர்களே மனிதர்களென்ன; மகான்களே அந்த மயக்கத்தால் அழிந்தனரென்று கதைகள் உண்டு. இவன் என்ன கண்டான் அந்த காதலெனும் கயமைத் தன்மையைப்பற்றி; என்று அவன் தன் இருதயத்தோடு பேசிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அந்தப் பேச்சு முடிந்ததும் மகனிடம் பேசத் துவங்கினான்.

"செல்வம்; வர்ணிக்கத் தெரியுமடா எனக்கும்--கேள் இதை--கல்விச் சாலை ஒரு கடல்--அதிலே மூழ்கி முத்தெடுக்க வேண்டுமே தவிர, காதற் கிளிஞ்சல்களைப் பொறுக்கக் கூடாது. பள்ளிக் கூடம் ஒரு தங்கச்சுரங்கம்--அதில் பொன்னைத்தான் எடுக்க வேண்டும். காதலெனும் கனகாம்பரப் பூவைத் தேடியலையக்கூடாது. சரித்திரங்களைப் படிப்பாய்--சமுதாயம் வளர்ந்த விதங்களைத் தெரிந்து கொள்வாய்--என்று உன்னை சர்வகலாசாலைக்கு அனுப்பினால் நீ சரசம்--சல்லாபம்...இவைகளிலே ஈடுபட்டு சரிந்து போகிறாய்!"

"சரித்திரத்திலேதான் படித்தேன்; ஷாஜஹானுக்கும் மும்தாஜுக்கும் ஏற்பட்ட காதலை' ஆங்கில இலக்கியத்திலேதான் படித்தேன். ஜூலியட்டும், ரோமியோவும் ஜோதிமயமான காதல் நட்சத்திரங்கள் என்று!"

"அதைப் படித்தாய்-ஆனால் கிளியோபாட்ராவின் கிளி மூக்கிற்கு அடிமையான சீசர் ஆண்டனி இவர்கள் சீரழிந்த விதத்தை நீ படித்திருக்க மாட்டாய்! காதலாம் காதல்--பித்துப்பிடித்த சில எழுத்தாளக் கழுதைகள் பிராண்டி வைத்த காட்டுமிராண்டிக் கற்பனை காமந்துக்கு போடுகின்ற திரை. எதன் பெயரடா காதல்? இளிச்சவாயனை தலைசப் பொம்மைகளின் மேல் ஏற்படுகின்ற தணியாத வேட்கைக்குப்பெயர்காதல் வெளி அழகைகண்டு கண்களின் ஒளி இழந்தவர்கள் உளறிவைத்த உருப்படாத சொல்லலங்காரத்துக்குப் பெயர் காதல்! சூதுக்குப் பெயர் காதல் சூனியத்திற்குப் பெயர் காதல்! சுகங் காணுகிற இடத்திற்குத் தாவுகிற உணர்ச்சிக்குப் பெயர் காதல்! நானும் பார்த்திருக்கிறேன் காதலை! நானும் பார்த்திருக்கிறேனடா-- "காதல் காதல்!" என்று பேசி, கடைசியில் என்னைக் காணவும் சம்மதிக்காத ஒரு காதலியை!"

"சூடான பாலைச் சுவைத்த பூனை ஆறிப்போன பாலைப் பார்த்ததும் அஞ்சி நடுங்குகிறது."

"ஓ! என்ன சொன்னாய்-- அந்த மூதேவியின் மோகம் தலைக்கேறி விட்டதா?"

"என் மூச்சோடு கலந்தவளை மூதேவி என்று சொல்லாதீர்கள் என் விழியிலே புகுந்துவிட்டவளை விரட்ட முடியாது என்னால்!"

"அடேய்! முள்ளம்பன்றிகளை விட மோசமானவர்களடா பெண்கள் உள்ளத்தைக் காதலிக்கத் தெரியாத கள்ளத்தனம் வாய்ந்தவர்களடா அவர்களுக்குத் தேவையானது. கருத்துக்கு விருந்தல்ல--கண்ணுக்கு ரம்மியம்-- அன்பல்ல. அவர்கள் விரும்புவது; அழகு! அழகு! அழகு! இருக்கும் வரையில் அடிமையாய் இருப்பார்கள். அழகு தேய்ந்து விட்டால் வேறு இடத்திற்குப் பாய்ந்து விடுவார்கள்!!

"உங்கள் அனுபவத்தை மட்டும் வைத்துக் கொண்டு காதலுக்கு அகராதி தயாரிக்கிறீர்கள்"

"ஆ!"

சந்தனத்தின் தொனி யானை பிளிறுவதுபோல் இருந்தது. தன்னுடைய அனுபவத்தைத் தன் மகனே இழித்துரைக்கிறானே - என்று கோபித்தான். அந்த வேகத்தில் செல்வத்தின் இரண்டு தோள் பட்டைகளையும் பயங்கரமாக உலுக்கியபடியே "என்னடா சொன்னாய்?" என்று கத்தினான். இனி எதற்கும் துணிய வேண்டியதுதான் என்ற நிலைமைக்கு ஆளான செல்வம்; காதல் மீது அவன் வைத்திருந்த மதிப்புக்கும். சிந்தை கவர்ந்த சிங்காரியாம் சித்ராவின் மீது கொண்டிருந்த அளவிட முடியாத ஆசைக்கும், தந்தை கற்பிக்கும்களங்கத்தைச் சகித்துக் கொள்ள முடியாமல் எதிரே நிற்பது தந்தையென்றும் பாராமல் ஒரு வார்த்தை கூறி விட்டான். சந்தனமே தன் மகனிடம் எதிர்பார்க்காத வார்த்தை அது! "என்னடா சொன்னாய்" என்று அதட்டி உலுக்கியதுதான் தாமதம்; உடனே செல்வம்--"சும்மா நிறுத்தும்! உமது அவலட்சணத்தை யாரும் காதலிக்கவில்லை என்பதற்காக பெண்கள் மீது சீறுகிறீர்?"-- சொல்லி முடித்தான் செல்வம். அவன் தோள் மீது இருந்த சந்தனத்தின் கைகள் திடீரென எடுக்கப்பட்டன. "அய்யோ!" என்று தன் தலையில் பலமாக பலமுறை அறைந்து கொண்டான் சந்தனம். அவனால் நிற்க முடியவில்லை. மயக்கம் வந்துவிட்டது போலிருந்தது. அழ வேண்டும்-நன்றாக அழவேண்டும்-என்று உணர்ச்சி அவன் நெஞ்சத்தைக்கனமாக்கியது. ஆம்! அழுதே விட்டான்-- ஏழெட்டு வருடங்கள் சிறைச்



சாலையிலே காலத்தைப் போக்கி. தன் அன்பு மகனைக் காணவந்த அவன்- இவ்வளவு பெரிய தீக்குண்டத்திலே தன்னைத் தள்ளி விடுவான் என்றே எதிர்பார்க்கவில்லை. 'ஓ'-வென அழுது விட்டான். கால்கள் பூமியிலே பதியவில்லை. குடிகாரனைப் போல தள்ளாடினான். போதையில் உளருகிற விதத்தில் ஏதேதோ பேசினான்—

"அவலட்சணம்! நீயும் கூறி விட்டாயா? நீ தானடா பாக்கி... உன்னைக் கஷ்டப்பட்டு வளர்த்ததற்கு, கடைசியாக நீ தந்த காணிக்கை, அவலட்சணம் என்ற பட்டம். இந்தப் பட்டம் பெறத்தானா உன்னைத் தோளிலும், மடியிலும். தொட்டிலிலும் போட்டுத் தொல்லைகள் அனுபவித்து வளர்த்தேன் அழகே உருவெடுத்தவனே! அதனால் அகம்பாவம் கொண்டிருப்பவனே! கள்ளக் காதலியை அடிமையாக்கி வைத்திருக்கும், உன் கட்டுக்குலையாத அழகு, இந்த அவலட்சணத்தால் தானடா வளர்க்கப் பட்டது!

அவலட்சணம்-- அகோரம்-விகாரம் -- அலங்கோலம்! அறிவுகெட்ட சிறுவனே; அவலட்சணத்துக்கும் அறிவுக்குந்தானடா உலகத்தில் நிரந்தரப் போட்டி; அதிலே அழகு ஜெயித்ததில்லை-- ஜெயிக்க முடியாது!

இன்று அழகு, நாளை விகாரம் இளந்தளிர், பழுப்பாகும் இளமை, கிழமாகும். அழகு அலங்கோலமாகும் என் முகத்தைத் திராவகமும், தீயவனும் தீய்த்து விட்டார்கள். இளமை தவழும் முகங்கள் கால ரேகைகளால் கரைபட்டுப் போகுமென்பதை மறந்து விடாதே! கொய்யா இதழ்-கொம்புத்தேன் கொட்டும் கன்னம் -- குழி விழுந்து போகும்!

கோமளத் தாமரைகள், குளிர்ச்சி தரும் கண்கள்--குருடாகிவிடும்.

வாலிப வனப்பு, வயோதிகப் படையெடுப்பின் முன்னே சரணடையத்தான் வேண்டும் அடபோது பார்; அழகு ஜெயிக்கிறதா- -அலங்கோலம் ஜெயிக்கிறதா என்று

அலங்கோலம், அவலட்சணம் எவ்வளவு கருணையற்ற உள்ளமடா உனக்கு' ரத்தம் கசியும் இருதயமடா இது! இதிலே நீ வேறு ஈட்டியைப் பாய்ச்சி விட்டாய். நீ என்ன செய்வாய்; என்னை அவலட்சணமென்று நினைத்து அலறி ஓடிவிட்ட அற்பபுத்திக்காரியின் அருந்தவப் புதல்வன் தானே நீ! மனைவி புதல்வன்-- அவர்களாலேயே சகித்துக் கொள்ள முடியவில்லை என் அழகை அழகு விரும்பிகள் கலாரசிகர்கள்; அவர்களிடத்திலே இந்த அவலட்சணத்திற்கு வேலையில்லை வேலையில்லை' வேலையில்லை!

இப்படி ஓங்கி அலறியவாறு இருண்ட மண்டபத்தின் உடைந்த தூணிலே தலையை 'படீர்! படீர்!' என்று மோதிக் கொண்டான் சந்தனம்.

செயலற்றுப் போன செல்வம், அவனருகே ஓடிப்போய் --'அப்பா! அப்பா' என்று கதறினான்--காலில் விழுந்தான்.

"அப்பனும்-மகனும்! அவலட்சணத்திற்கு ஏதடா மகன்!' என்று அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு ஓட ஆரம்பித்தான் சந்தனம். "அய்யோ அப்பா என்னை மன்னித்து விடுங்கள்" என்று பின்னே ஓடினான் செல்வம்

ஓடிய சந்தனம், பயங்கரமாகத் திரும்பி--நான் யார் உன்னை மன்னிக்க--இனி இந்த உலகில் எனக்கு யார் இருக்கிறார்கள்--பாவி மகனே, இன்னும் சிறிது நேரத்தில் மூச்சற்றுச் சாயப்போகும் என் பிணத்தையும் உன் அழகுக் கரங்களால் தொடாதே! என்று சொல்லிவிட்டு சந்தனம்--அந்த மரமடர்ந்த சோலையைத் தாண்டிகுவிந்து கிடக்கும் மலைப்பாறைகளின் பக்கம் ஓடினான்.

'சித்ராவை மறந்து விடுகிறேன் அப்பா! என்று செல்வம் பின் தொடர்ந்தபடி கதறியது சந்தனத்தின் காதில் விழவில்லை இருவரும், நிலவு பொழியும் அந்த இரவில் ஓடிக்கொண்டேயிருந்தார்கள்.

சந்தனத்தின் வேகம் நிறைந்த ஓட்டத்தை பிடிக்க முடியவில்லை. தந்தை ஏதோ ஒரு விபரீத முடிவோடு செல்கிறார் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்து விட்டது அவனுக்கு' எப்படியும் அப்பாவிடம் மன்னிப்புக் கேட்டுவிட வேண்டுமென்று அவன் துடித்தான். ஐந்து விரலோடு ஒட்டி ஒரு சிறு விரல் முளைத்திருந்தால் அந்த மனிதனைப் பார்த்து; 'ஏ ஆறு விரல்' என்று அழைத்தால் அவனுக்கு எவ்வளவு கோபம் வருகிறது-- அழைப்பதென்ன; ஆறு விரல் உடையோனே, ஆசையுள்ள ஆண் மகனே '! என்று போற்றிப் பாடினால் கூட அவன் ஆத்திரமே கொள்வான்-- 'ஐந்துகரனே! ஏகதந்தனே! மூஷிகவாகனா' என்று பக்தர்கள் கேலியாக அழைக்கும்போது விநாயகர் வேண்டுமானால் தன் அங்கஹீனங்களையும் அவலட்சணங்களையும் நினைத்துக் கவலைப்படாமல் கல்லுப்போல உட்கார்ந்திருக்கலாம்! உயிருள்ள மனிதர்கள் அந்தக் கேலிகளைச் சகித்துக்கொள்வது மிகவும் கஷ்டம்தான். அதுவும் தந்தையின் அவலட்சணத்தை மகனே கேலி பேசுவது என்றால் அதை சந்தனம் பொறுத்துக் கொள்ள முடியுமா? தனக்கு ஏற்பட்ட அந்த விகார உருவை நினைத்து நினைத்து மனம் புழுங்கிப்போன வனல்லவா அவன்-- ஆகையால் அவனால் தன் செல்வத் திருமகனை மன்னிக்க முடியவில்லை. மன்னிப்பு பெற ஓடோடி வரும் மகனையும் திரும்பிப் பார்த்திடும் எண்ணம் எழவில்லை. சிறிது இனிமேல் தந்தையைக் காண முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டான், ஓடிக் களைத்த செல்வம். மேல் மூச்சும், கீழ்மூச்சும் போட்டி போட, ஓரிடத்தில் நின்றுவிட்டான், சந்தனம் ஓடிய திக்கையும் அறிய முடியாமல் தவித்தான். அவன் கண்களில் இரு பெரும் நீர்வீழ்ச்சிகள்; அவன் வாய் முணு முணுத்தது — அதுவும் திணறித்திணறி--நாக்குழறிக் குழறி, 'அப்பா அப்பா!' பிறகு ஓவென அலறி விட்டான் செல்வம் எவ்வளவு நேரம் அப்படி அலறிக் கொண்டிருந்தானோ தெரியாது பின், வந்த வழியே திரும்பினான்.

சித்ராவைப் பார்க்கவேண்டும் போலிருந்தது அவனுக்கு. அந்த இருட்டில் இனி மேல் அவளை எங்கு போய்த் தேடுவது! தேடிக் கண்டு பிடித்தால்தான் அவன் இருதயத்தின் சுமையைக் கொஞ்சம் குறைத்திட முடியும். சித்ராவும் அவனும் காதலர்கள்தான்; ஆனால் அவன் சித்ராவின் வீட்டுக்குச் சென்ற

கருணாநிதி

தில்லை-சித்ராவின் தாயார் தங்கம்மாள், அவர்களுடைய காதல் கதைக்கு உடனடியாக மதிப்புரை எழுதக் கூடிய குணம் படைத்தவள், அல்ல என்பதை செல்வம். சித்ராவின் வாயிலாகக் கேள்விப்பட்டிருக்கிறான். அதனால் அவன் அவளுடைய வீட்டில் நுழைந்ததே இல்லை. தங்கம்மாள் ஏழைதான் என்றாலும் தன் மகள் சித்ராவை செல்லமாக வளர்த்து வருகிறாள்! அவள் பிரியப்படியே நடந்து வருகிறாள்-என்றெல்லாம் காதலியின் மூலமாக அவன் கேட்டிருக்கிறானே தவிர தங்கள் இருவரின் காதல் தோன்றிய நாள்முதலே நோயுற்றுப் படுக்கையிலிருந்தும் சித்ராவின் தாயார் தங்கம்மாளை அவன் சந்திக்கத் துடித்தும், சமயம் ஏற்படவில்லை. 'உன் அம்மா வியாதியாயிருக்கிறார்களே; அவர்களை நான் பார்க்கிறேனே, நான் பார்த்ததே இல்லையே" என்று செல்வம் சொன்ன போதெல்லாம் "அய்யோ வேண்டாம்-எங்கம்மா பெரியபழைய காலம்; மூட நம்பிக்கையின் சிகரம்; அவர்கள் நம்மிருவரையும் சேர்ந்து பார்த்தால் உடனே புரிந்துகொண்டு, இந்த சகவாசம் எல்லாம் கூடாது சித்ரா! என அழ ஆரம்பித்து விடுவார்கள்' என்று அவள் அவனை வீட்டுக்கு வராமல் தடுத்திருந்தாள். அத்தகைய தாயைப் பெற்றிருக்கும் தன் அருமைக் காதலியின் வீட்டுக்கு இப்போது அவன் எப்படியும் போய்த் தீர்வது என்று முடிவு கட்டி விட்டான். தந்தையின் திடீர்ப் பிரவேசத் தால்திமிதித்தவன் போலாகி விட்ட என மலர்ப் பாதமுடையாள் - மனவாட்டத்தைச் சுமக்க முடியாமல் தூக்கத்திலிருந்து விடுபட்டுத் துடித்துக் கொண்டுதானிருப்பாள்-கொல்லைப்புறம் நின்று கொண்டு, ஒருகுரல் கொடுத்தால் போதும்; எப்படியும் ஓடிவந்து விடுவாள்-பூனையின் பாதத்தைவிட மிருதுவான பஞ்சுப் பாதங்களாயிற்றே அவளுக்கு! அதனால் அவள் அம்மாவின்காதுகளை நன்றாக ஏமாற்றிவிட முடியும்-இருவரும் சந்திக்கலாம்; இருதயக் கீறல்களுக்கு மருந்து போட்டுக்கொள்ளலாம் என்று எண்ணியவாறு செல்வம், சித்ராவின் வீடுநோக்கி நடந்தான். கொல்லைப்புற வேலியைத் தாண்டிக் குதித்தான். அப்போது அவன் காலிலே குத்திய முட்கள் கணக்கிலடங்கா, அவைகளையெல்லாம் எடுத்தெறிந்தான். 'இந்த முட்களை எடுத்து விட்டேன்! என் நெஞ்சிலே சொருகி விட்ட முட்களை வேதனையில்லாமல் எடுத்துவிட முடியுமா? அல்லது எடுக்கும் முயற்சியிலேயே இறந்துவிட வேண்டுமா? என்றெல்லாம் அவனுக்குள்ளாக சொல்லிக் கொண்டான். அந்த நல்ல வாலிபனின் காந்திநிறைந்த முகம் தூசி நிறைந்த கண்ணாடி போல் ஆகியிருந்தது நிலவின் ஒளியிலே சித்ரா வீட்டுக் கொல்லை வாயில் அவன் அடையாளம் கண்டுபிடித்து விட்டான். அந்த வாயிலை நோக்கி அவன் நடந்தான் அவனுக்கே அவனை நம்ப முடியவில்லை. கதவு திறந்திருந்தது சற்று திகைத்தான்-நின்று கவனித்தான் அவன் நெஞ்சு படபடவென அடித்துக்கொண்டது. மீண்டும் உன்னிப்பாகக் கவனித்தான் உள்ளேயிருந்து கேம்பும் குரல் கேட்டது; விக்கி விக்கி அழுகின்ற ஒரு பெண்ணின் தொனிதான் அது!

"சரி-நம்ம விஷயம் அவள் தாய்க்கும் தெரிந்துவிட்டது; அதனால் மகளைக் கண்டித்திருக்கிறாள்!" என்று தனக்குத்தானே பதில் சொல்லிக் கொண்டான் அவன் நெஞ்சு முன்னிலும்பலமாக அடித்துக் கொண்டது. அவள் அழுகை ஒலியுடன்-'அம்மா! அம்மா!' என்ற ஒலியும் கொஞ்சம் உச்சஸ்தாயியில் கேட்டது. "சித்ரா" என்று கூப்பிட்டு விடலாமா என்று தோன்றியது அவனுக்கு! 'ஒருவேளை-நோயால் பீடிக்கப்பட்டிருந்த அவள் தாய் திடீரென இறந்திருக்க வேண்டும்" என்ற யூகமும் பிறந்தது- ஆகவே மெதுவாக அடியெடுத்துவைத்து வீட்டுக்குள் பிரவேசித்தான்; உள்ளே பார்த்தான். மினுக்மினுக்கென்று ஒரு மங்கலான விளக்கு, தன்னால் முடிந்த கடமையைச் செய்து கொண்டிருந்தது. அந்த ஒளியிலே சித்ரா கீழே கருண்டு படுத்திருப்பதும் தெரிந்தது சுற்று முற்றும் பார்த்தான். ஒரு கயிற்றுக்கட்டில்-ஆம்; அதில் தான் நோயுற்ற அவள் தாய் படுத்திருக்க வேண்டும்-இப்போது அவள் எங்கே போய் விட்டாள்? ஒருவேளை தன் தகப்பனைப்போல அவளும் எங்காவது ஓடிவிட்டாளா? இதையெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்க செல்வத்துக்கு நேரமில்லை அவன் சித்ராவைப் பார்த்ததும் 'சித்ரா' என்று கதறிவிட்டான் அவளும் திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தாள். 'செல்வம்' என்று கூவியபடி அவன் மீது தாவிட்டாள். இருவரும் சிறிதுநேரம் எதுவுமே பேசவில்லை அழுது கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

★
★★

தலைவர் கலைஞரின் வேண்டுகோளுக்கிணங்க

புயல் - வெள்ளத் துயர்துடைப்பு நிதி!

(அனுப்பியோர் பட்டியல்)

(30 7-78 இதழ் தொடர்ச்சி) ரு 69232-03

தஞ்சை கோவிந்த நல்லூர் சி. லிங்கராசு திருச்சி தமிழ் விருப்பி இக்பால் காலனி எம், சந்தானம். உலகநாத புரம் மருதமுத்து திருவானைக்கோவில் இரங்க ராசன் சுப்பிரமணியபுரம் எல் வி. வேணை மபரம்ப லூர் எஸ். ஜோதிமணி சுப்பிரமணியபுரம் டி வி எஸ் ஆர் ரங்கராசு, காமராஜ் நகர் டி. எஸ். சண் முகநாதன் திருவரங்கம் இரா. சீனிவாசன். பொன்மலை ஆர். பெரு மாள். ஆகிய 11 பேர் ரூ. 5- விதம் 55 00

புதுக்கோட்டை ஆர். எம். அப்துல் அமீது எஸ் அப் பாவு, அறந்தாங்கி எம். கல்யாணராமன், கே. அருட் செல்வம் சுப. சீனிவாசன். ஆர். கோவிந்தசாமி அ. காதர்பாட்சா. தஞ்சை மதுக்கூர் வி கே. சரவணன் சி. ஞானம்பாள். சி. மணி. எஸ் வேதரத்தினம் எஸ் நய்னு முகமது கே சிவசுப்ரமணியம். என் கருணாநிதி ஆகிய 14 பேர் ரூ 5- விதம் 70 00

காஞ்சி சுப்பிரமணியன், பொன்மலை எம் ஆறுமுகம்: கோவை கா புதூர் பீ. கே. மாரிமுத்து காளிங்கராயன் பாளையம் புதூர் கருப்பண்ணன் கே. முத்துசாமி, பவானி பி. சுந்தரம், கோவிந்தசாமி. பழனிசாமி, திருச்சி லப்பைக் குடிக்காடு அப்துல்லா, முகமது ஷெரீப் கே வி சுப்பு, திருச்சி-14 பிரான்சிஸ் பாலசுந்தரம், திருச்சி-13 கிருட்டிணன் ஆ. திருவேங்கடம் மேட்டுப் பட்டி இரசியா. கோமாகுடி டி. பொற்கொடி. வி.களத் தூர் அப்துல் அமீத். எம். ஏ. முகமது காசீம். திருச்சி 19 முத்துசாமி. சீதாராமன். பொதட்டூர் பேட்டை கண் ணம்மாள். ஏழுமலை. கந்தசாமி, முனுசாமி, சிவசக்தி வேல். கோவிந்தசாமி காஞ்சி 1 அகஸ்தியப்பன், வ. ஆ. வாணியம்பாடி முகம்மது சிரம்ஸ் அன்சாரி, கே. எம். இஸ்மாயில். கீழ்முருங்கை சுவாமிநாதன். ஜெயப்பிர காசம் தேவேந்திரன், ஆ. முனிசாமி- சேட்டு ஜி பொன் னுசாமி; ஆகிய 36 பேர் ரூ 5- விதம் 180 00

தர்மபுரி வேலம்பட்டி க. சின்னசாமி செங்கம் எஸ் ஏ. ரசீத். ஜி. நாராயணசாமி அன்பானந்தம். வ ஆ. திருப்பத்தூர் ஆர். எஸ் மணி, டி. எஸ். ராஜவேல், எஸ். வி. சம்பத், மேட்டூர் எஸ் ரங்கசாமி. அக்கிரா கரம் எம். இராசு, எம். பெருமாள். டி. சிகாமணி, சரோஜா, திருச்சி உய்யக்கொண்டான் அரங்கசாமி, அரங்க சதாசிவம் ஆகிய 14 பேர் ரூ 5—விதம் 70 00

மதுரை-2 வி, தேவராசு, திப்பி ரெட்டி டி எம். ஆறு முகம். ஆம்பூர் சாந்தி நிர்மல். குமார், வாணியம்பாடி எஸ் பூபாலன். தர்மபுரி பி. மாணிக்கம், திருப்புக்குழி டி. எம். ராதாகிருஷ்ணன். கோவிந்தராசன். அரக்கோ ணம்-1 டி. எம் டி ஹலிமா. டி எம் டி தஸ்னீம பழனி எஸ் சாகுல் அமீத் கிரிசமுத்திரம். சி. சீதரன். வேட சந்தூர். ஆ சண்முகம். செம்பட்டி எல். எஸ் சேசுராசு ஊத்தங்கரை கே ரத்தினம், பவானி கே. துரைராஜ், கவுந்தப்பாடி ப. வீரப்பன், பி ஆண்டன் ஆகிய 17 பேர் ரூ 5. விதம். 85 00

ஈரோடு விருமாண்டபாளையம் வி ஆர். பூசப்பன், பி எம். ரங்கசாமி, கே. எஸ். கே. ஆறுமுகம் எம். கோவிந்தன், வி பி. பெரியசாமி, தெய்வசிகாமணி, ஏ சி. பொங்கியண்ணன், வெள்ளைக் கவுண்டர் முத்து சாமி. பெருந்துறை பி. கவுந்தியப்பன். பாளையம்புதூர் கே. ஆர் சுப்பிரமணி. ஈரோடு எலவமலை என். முத்து சாமி பவானி கே. எஸ் பழனிசாமி, பி முனியப்பன் ஆறுமுகம். தனலட்சுமி டிரேடர்ஸ், காட்டுப்பாக்கம் முருகேசன் பூந்தமல்லி ரமணிபாய். தாங்கள் வி. புன் ணியகோட்டி ஆகிய 19 பேர் ரூ 5-விதம் 95 00

நெல்லை கருங்குலம் என் காஷ்மீர் இராசு குமரி, மங்கல குன்றம் மு செல்லப்பன், கருங்கல் த இரத்தின நாய கம். வீர நல்லூர் இசக்கி: எஸ் சேகராஜ். க சுப் பையா, மதுரை, வே சண்முகம் நடேசன் இளையான் குடி ரசூல்கான் தஞ்சை, உதயபுரம் வி ராஜசேகரன், கரந்தை ஜி. பழு.சாபகேசன். என். இளங்கோ, பாண்டி என் இராஜன். தூத்துக்குடி சிவ. சுப்பிரமணியம், ஆகிய 14 பேர் ரூ 5-விதம் 70 00

ஆஞ்சூர் ஏ வி. தங்கவேலு, ஜி. கலியபெருமாள மதுரை ஞானஒளிவுபுரம் சு. பெ. பாபாராசு திருவா ரூர் எஸ். முருகையன். அத்திப்புலியூர் எஸ். பக்கிரிசாமி சிதம்பரகோட்டகம் கே பாலு. திருக்கோவிலூர் ஆர். திருநாவுக்கரசு. கோவை-18 இராமநாதபுரம் எம். அங்கமுத்து எம் பத்மநாபன், பி காமாட்சி, வ. ஆ. சின்னபுட்பகிரி என். சின்னையாச்சாரி, மு குப்புசாமி, திருப்பத்தூர் எஸ். கிருட்டிணன் சி. கேசவன், என். சண்முகம் சென்னை அபன்புரம் திருச்செந்தூர் முருகன் வெயலமண்டி வேலூர் என். வாசுதேவர் கே லோக நாதன் பி முனிரத்தினம். சென்னை சத்தியநாராயண வெல்லமண்டி. வ. ஆ ஒல்நடவுன் பூ ரெங்கநாதன், வேலூர் டி பி. பாண்டுரங்கன் டி. எஸ் ஜெகதீசன், சென்னை-54 செய்பது அசனலி. செ. அமிர்தசாமி சொ. மாணிக்கம் ஏ டேவிட். து செ, ஆட்லரசன், சென்னை-62 சிவசங்கரபுரம் எஸ். உலகப்பன் சென்னை-54 ஆ பெ சீனிவாசன், பழைபவண்ணை கோ. நித்தியானந்தம் சென்னை-4 ரத்தினசாமி கிண்டி கதிரவன், இராசேந்திரன் த வீரையா சென்னை-14 ஏ. எட். டி கோபாலகிருட்டிணன். ஆகிய 36 பேர் ரூ 5- விதம் 180 00

சேன்னை-28 கலைஞர் படிப்பகம் உடன்பிறப்புகள் 5 00

ஆதம்பாக்கம் கே மனோகரன். கு இராசலிங்கம், சென்னை-20 என் இராசமாணிக்கம், சென்னை-79 பி. சே. பிரகாசம். வ ஆ காமாட்சிபுரம் கிருட்டிணன் குமரன், இராணிப்பேட்டை தாயாரம்மாள் டி. கே. கலைச் செல்வி தோப்புக்கரை எம் கணேசன் குட்ட கரை டி ஏ பாலகிருட்டிணன் களம்பூர எஸ் ஆர்.முகைதீன் சென்னை-79 திருமுடிவாக்கம் ஜி கற்பகாம்பாள், ஏகாம்பரம் ஆகிய 13 பேர் ரூ 5-விதம 65 00

செங்கை கன்னிகைப்பேர் ஆர். ஜி பழனி கே. பி. மதுரை எம் வடிவேல். டி. கதிர்வேல் கே எம். இராதாகிருட்டிணன், கே டி இராமச்சந்திரன் ரவி. மதுரை எம். பரலகிருட்டிணன் கே மூக்கையா கம்பம் எம் முகமது மீரான், திருமங்கலம் ஏ ரெங்கபாஷியம், ஆர் ராசம்மாள், சென்னை-61 ஜி சுப்பிரமணியன், சென்னை-45 ஆர். மொரயின் சென்னை-44 எஸ் எம். திருநாவுக்கரசு பெங்களூர் டி தேவநேசன் எம். முனு சாமி ஜலஹல்லி டி என். ஈஸ்வரன் முகவை பிள்ளை யார் நந்தமவி பெருமாள்சாமி கோவை காலிங்க ராயன் பாளையம் புதூர் கே ஆர் செங்கோட்டையன், பழனியம்மாள் பி. எஸ் அங்கப்பன் பெரம்பூர் இ. இலங்கேஸ்வரன், ஜே பாண்டியன் திருமதி. வசந்தி பாண்டியன் குழந்தை மாதவி திருப்பெரும்புதூர் ஜி. குப்புசாமி முகவை சாமிபார்பட்டி பி ஆர் மருது, கோவை பள்ளபாளையம் ஆ காணிக்கைமரி திருச்சி-2 பாலசுப்பிரமணியம். கலைஞர்தாசன். முகவை மண்ட பம் ஆர். கதிரேசன். கும்பகோணம் ஆர். கணேசன், விழுப்புரம் ஜி. வைத்திலிங்கம், வி இராமு. சேலம் எம். கே. சுப்ரமணி ஆகிய 36 பேர் ரூ 5- விதம் 180 00

விழுப்புரம் ஆர் சுந்தரமூர்த்தி, ஏ இராசேந்திரன், வாணியம்பாடி ஜி ஜானகிராமன், கிருட்டிணகிரி வளர் மதி மளிகைக்கடை, செங்கம் சி இராதாகிருட்டிணன், என் பாலன். பண்ருட்டி ஏ சின்னதம்பி. திருச்சி ம. இராசன், பா. வ சக்திவேல் முகவை மண்டபம் இ. நாகூர்கனி. மதுரை கப்பலூர் பி. பொன்னையா. தரும புரி கருப்பன். கிருட்டிணகிரி டி. கோவிந்தராசன்; பெங்களூர் நேருபுரம் ஏ. எம். எத்திராசன் ஆகிய 14 பேர் ரூ 5- விதம 70 00

சென்னை வியாசர்பாடி இரா. முத்துகிருட்டிணன், ச. குகன். இராதா அம்மாள் எஸ். பெருமாள், சி. தெ. இளமுருகன், கி பக்தவச்சலு வி. முனுசாமி, என். குப்புசாமி, ஏ கோபால், பழையவண்ணை ம பா. சகா தேவன் செனாய் நகர் ஏ. மகாவிஷ்ணு, பட்டாளம் தேவேந்திரன் தண்டையார்பேட்டை செல்லம்மாள், சொக்கலிங்கம் அமைந்தகரை டி. ஏழுமலை, சத்தியமூர்த்தி நகர் வி. துரைசாமி, சிங்காரம்மாள், கே. ஜெயலட்சுமி, கே. குப்புசாமி, திருவள்ளூர் கே விசா லாட்சி கே. பலராமன், கல்யாணபுரம் கே. பராங் குசம், சென்னை-52 புதிய பர்மா நகர் எம். சுப்பிரமணி, செங்கை ஒதிக்காடு கே. பரிமளா. கு. காளியப்பன். சென்னை-2 ஜக்கிரைய்யா, சென்னை-39 எம். காளி யம்மா முனிபாண்டி, ஆர். முனிபாண்டி; கே. கணே சன் கே. பழனி, சென்னை 23 சின்னராசு சென்னை-49 எம் கிருஷ்ணையா, சென்னை-52 ஜி. சேர்மன் சென்னை 39 சரோஜா கண்ணன் டி. கண்ணன் ஆகிய 35 ரூ. 5- பேர் விதம் 175 00

திருவண்ணாமலை கே. இராமநாதன், ஆம்பூர் ஏ. பி. கன்னியப்பன், மாயாவதியம்மாள், எஸ். குப்புசாமி ஏ. பி. ஏஸ். குமார், ஏ. டி. சம்பத்து ஏ. டி. சுப்பிரமணி வேலூர் மு துரை, மு. பஞ்சாட்சரம், கி. துரைசாமி, பி ஏ கண்ணன், ஜி. வேணு டி. இராசேந்திரன் எஸ். காந்தி சுப்பிரமணி ஆகிய 15 பேர் ரூ 5 விதம் 75 00

ஆகமொத்தம் ரு. 70,607—03

நேரம் நெருங்கி விட்டது!

இரயில்வே துறையில் இந்தித் திணிப்பு இருக்காது என்ற மத்திய அரசின் வாக்குறுதி, ஒரு ஏமாற்றுத் தனமான பேச்சே என்பதை நாடாளு மன்ற வலது கம்யூனிஸ்ட் உறுப்பினரான திருமதி, பார்வதி கிருட்டிணன் 'வெட்ட வெளிச்சமாக்கினார்.

இரயில்வே துறையினர் முழுக்க முழுக்க இந்தியில் மட்டுமே தமக்கு எழுதிய ஒரு கடிதத்தை நாடாளு மன்றத்தில் காட்டிய அவர், 'யாரி மீதும் இந்தியைத் திணிக்க மாட்டோம்' என்ற ரயில்வே அமைச்சர் மது தண்டவாதேயின் வாக்குறுதி எப்படி நீர்மேல் எழுதப்படும் எழுத்துக்களாயின என்பதை மெய்ப்பித்தார்.

இரயில்வே துறையின் இந்த அத்துமீறலான இந்தித் திணிப்பை எதிர்த்துத் தென்னாட்டு உறுப்பினர்கள் அனைவரும் கண்டனக் குரல்கள் எழுப்பினர்கள். அது மட்டுமல்ல ..பார்வதி கிருட்டிணன் ஆங்கிலத்தில் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் இந்தியிலேயே பதில் அளித்துத் தமது 'மொழி வெறியைக் காட்டிக் கொண்டார்.

"பொதுத்துறைத் தொழில் நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு இந்தி வகுப்புகள் நடத்த வேண்டும் அவ்வகுப்புகளுக்கு வரவும் தேர்வுகள் எழுதவும தவறும் ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றெல்லாம் வேண்டுகோள் என்ற பெயரில் 'கட்டளைகள் இடும் மத்திய அரசின் இந்தப் போக்கினால், இந்தி பேசாத பணியாளர்கள் தங்கள் வேலை வாய்ப்புக்களை இழக்க வேண்டிய பேரபாயம் ஏற்படலாம்

இந்தித் திணிப்பைத் தீவிரமாக்கிவரும் மத்திய அரசின் ஒரு தலைப்பட்சமான ஓரவஞ்சனையான நடவடிக்கையை முறியடிக்கத் தென்னாட்டவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம நெருங்கி விட்டது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் தெரியும்' என்று எரிந்து விழுந்தார்.

கல்நெஞ்சினரையும் கரைய வைக்கும் விழுப்புரம் சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாகப் போகாமலிருந்தது மட்டுமல்ல, அவ்வழியே இருமுறை சென்று வந்தவர் மூன்றும் முறையாக மதுரையில் நடைபெற்ற மேயர் விழாவிற்கும்சென்றார். மதுரை சென்று திரும்பும் வழியில்தான் விழுப்புரத்தில் உதவிப்பணம வழங்க விழா வாம்.

மதுரை மேயர் முத்துவுக்குத் தங்கச் சங்கிலி அணிவித்து செங்கோலைக் கையில் கொடுத்து நடைபெற்ற விழாவிலே வானை முட்ட வெடித்திட்ட வாண ஒலியில் விழுப்புரம் மக்களின் அவலக்குரல் அழுகுரல் எடுபடவில்லை.

மதுரை வெற்றிக் களிப்பிலே மிதக்கும் எம். ஜி. ஆர். விழுப்புரத்திலும்விழாநடத்த கட்டளையிட்டு விட்டார். விழுப்புரத்திலே நடத்தப்பட வேண்டியது விழாவா? வேதனையாக அல்லவா இருக்கிறது!

கதை திரும்புகிறது!

அன்று—சஞ்சய் காந்தி! இன்று—காந்தி தேசாய்?

தலைமை அமைச்சர் மொரார்ஜியின் மகன்தான் காந்திபாய் தேசாய் அவருடைய வருமானவரி தொடர்பான கோப்புகளைப்பற்றி தவறான தகவல்களை நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தந்தார் என்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் உரிமைப் பிரச்சினை எழுப்பினர் இது நாடறிந்த விஷயம். கோப்பு காணமல் போய் விட்டது பிறகு கண்டு பிடிக்கப்பட்டது என்றெல்லாம் கண்டபடி தகவல் தரப்பட்டது நாடாளு மன்றத்தில்

அரசின் பாதுகாப்பில் கோப்புகளும் சில முக்கிய ஏடுகளும் இருக்கின்றன அவை எந்தவித மாற்றமும் அடையாது என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? கோப்புகள் காணவில்லை என்கிறர்கள். கண்டு பிடிக்கப்பட்டது என்கிறர்களே இதற்கு உள்ள இடைக் காலத்தில் என்ன நடைபெறுகிறது என்பதை யார் அறிய முடியும்? என்று சரண்சிங் போன்றோர் கேட்கிருர்கள். தனி உரிமை படைத்த விசாரணைக்குழு அமைத்து தீவிரமாக விசாரித்து அறிக்கைக் கொடுக்க ஆவன செய்தால் ஒழிய திட்டவட்டமான இந்தவிதக் குற்றச் சாட்டுகளைச் சுமத்தவோ விசாரணைக்கு உட்படுத்தவோ வழக்கைத் தொடுக்கவோ அடிப்படைச் சான்றுகள் கிடைக்காது என்றும் சரண்சிங் போன்றோர் கருதுகிறர்கள் அதிகாரிகள் பாதுகாப்பிலிருந்து அந்தக் குறிப்பிட்ட கோப்பு களவாடப் பட்டிருக்கிறது காந்திபாய் தேசாயை ஒரு மோசடிக்காரர் என்று கூறும் பம்பாயிலிருந்து வெளிவரும் ஓர் ஆங்கில ஏடு, 'என் மகன் மீது திட்டவட்டமான குற்றச் சாட்டுகள் எங்கே' என்று கேட்ட தலைமை அமைச்சருக்கு அவைகளை எடுத்துக் காட்டியுள்ளது.

வருமான வரித் துறையில் அந்தக் குறிப்பிட்ட கோப்பு 1973இல் காணமல் போய் விட்டது பிறகு கண்டு பிடிக்கப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட கோப்பு மீண்டும் ஒரு முறை 1977இல் காணமல் போய்விட்டதும் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது இந்தக் கதைகளையெல்லாம் வருமான வரி அதிகாரிகள் மேல்மட்ட அதிகாரிகளாக உள்ள கமிஷனர்களுக்கு தெரிவித்து உள்ளனர்.

அதுமட்டுமின்றி நேர்முக வரி வாரியத்தைச் சார்ந்த முக்ய அதிகாரிகள் தலைமை அமைச்சர் அலுவலகத்திலிருந்தும், நிதி அமைச்சகத்திலிருந்தும் வந்த நிர்ப்பந்தங்களுக்கும், வேண்டுகோளுக்கும் பணிய மறுத்த தகவல்களை அறிக்கையாகவும், குற்றச் சாட்டுகளாகவும் அளிக்கப்பட்டனஎன்றும்தெரியவருகிறது இப்படி வெளிப்படையாக 'வீதிக்கு வந்து விட்ட' பிரச்சினையின் மீது தலைமை அமைச்சர் எடுத்த நடவடிக்கை என்ன? என்றும் கேட்கிருர்கள்.

'நாட்டின் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த பயங்கரக் குற்றச்சாட்டு பொய்யானது புரட்டுமிகுந்தது என்றல் அதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டாமா? அதற்காகவேனும் விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டாமா? என்றும் வினக்களைத் தொடுக்கிருர்கள்.

சா. கணேசன்

உண்மையாகவே அந்தக் கோப்பு களவாடப்பட்டு பின்னர் அது அந்த இடத்திற்கே திரும்பி வந்துள்ளது என்று ஆதாரபூர்வமாக திருப்திக்க வருமான வரித் துறையின் பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ளதாக கூறப்படுகிறது

நீதித்துறையைச் சார்ந்தவரைக் கொண்டு விசாரணை நடத்தினலோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்டு விசாரணை நடத்தினலோ உண்மைபுலப்படும். இல்லையெனில் இப்படிப்பட்ட போலித்தனமான நெறியில் உண்மையை உலகுக்கு எடுத்துக்கூறவே முடியாது போய் விடலாம்.

எனவேதான் முறையான சுதந்திரத்தோடு காந்திபாய் தேசாயை ஆழ்ந்து ஆய்வு செய்ய வேண்டுமென்று இன்று நாடெங்கும் உரத்தக்குரல் எழும்பியுள்ளது. நாடு தழுவிய இந்த வேண்டுகோள் நாடாளும் நாயகர் மொரார்ஜி தேசாயின் செவியில் விழுந்ததாகத் தெரியவில்லை. ஆகவேதான் மக்களின் எண்ணத்தை மதித்து உண்மை அறிய காந்திபாய் தேசாயின் வழக்கினை விசாரணைக் குழுவிற்கு உட்படுத்த பலமாக மறுக்கிருர் அந்தக் குறிப்பிட்ட கோப்பு களவாடப்பட்ட செய்தியை நாட்டு மக்களுக்கு ஒரு வார ஏடு எடுத்துக் காட்டியதால் அந்தக் கோப்பில்சில தஸ்தாவேஜுகள் எடுக்கப்பட்டு விட்டன என்றும் சொல்லப்படுகிறது.

இந்த நிலையில் ஆதாரங்களோடு ஏடுகள் சில காந்திபாய் தேசாய் மீது உள்ள புகார்களை நாட்டு மக்கள் முன்னல் எடுத்து வைத்தனர். நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் சிலர் இந்தப் பிரச்சினையை எழுப்பினர்கள் முன்னள் உள்துறை அமைச்சர் இதுபற்றி புகாரைக் குறிப்பிட்டுக்கடிதம் எழுதியுள்ளார் தலைமை அமைச்சருக்கு.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட 'காந்திபாய தேசாய் ஊழலிலும் வருமான ஏய்ப்பிலும் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டிய சில செய்திகளை அரசு பார்த்ததாகவும் புகார்களின் தன்மையைக் கவனிக்கும்போது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய காரணம் இல்லை' என்றும் நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் மொரார்ஜி கூறுகிறர்.

அதுமட்டுமின்றி விசாரணை நடத்த சரண்சிங் கூறிய யோசனை சம்பந்தமாக 'திட்டவட்டமான புகார் அல்லது சான்று இல்லையாதலால் விசாரணைக்குத் தேவையில்லை' என்றும் தலைமை அமைச்சர் தேசாய் மீண்டும் வற்புறுத்தினர்.

ஆதாரபூர்வமான நிலையிருந்தும் அமைச்சரவையிலே உள்துறை அமைச்சராக அண்மைக் காலம் வரை இருந்த சரண்சிங் கூறிய குற்றச் சாட்டுகளை விசாரணைக்குத் தகுதியில்லை என்று உறுதியோடு கூறும் தலைமை அமைச்சர் தேசாயைப் பார்க்கிறது நாடு.

நடக்காதவைகளை நடந்ததாகக் கதை திரித்த புகார்களைக் கொண்டு நீதிபதி சர்க்காரியா ஒருதலைப் பட்ச விசாரணை நடத்தியதை நாடே அறியும். நெருக்கடி காலத்தில் அரசியல் வஞ்சம் தீர்க்க வேண்டி தி. மு. க. ஆட்சியைக் கவிழ்த்தது காங்கிரசு ஆட்சி. பொய்ப் புகார்களை வசாரித்திட மிசா சட்டத்தைக் காட்டி அதிகாரிகளை மிரட்டினர். பதவி ஆசை காட்டி சாட்சிகளைத் தயாரித்தனர் அப்படி உருவான அறிக்கைதான் சர்க்காரியா அறிக்கை. ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவராக மொரார்ஜி சென்னைக் கடற்கரைத் தேர்தல் கூட்டத்தில் முழங்கவில்லையா? 'கழக ஆட்சி கலைக்கப்பட்டதும் சர்க்காரியா விசாரணை நியமிக்கப்பட்டதும் அரசியல் வஞ்சம் தீர்த்திட' என்று.

தேர்தல் முடிந்தது. ஜனநாயகம் வென்றது. ஜனதா ஆட்சி பீடம் ஏறியது. மொரார்ஜி தலைமையமைச்சரானர். அரசியல்வணிகம் ஆரம்பமானது. நெருக்கடிநிலை அடியோடு ஒழிந்திட, 'மிசா சட்டம் முற்றிலும் முறிந்திட சர்வாதிகாரம் இத் தரணியில் சாய்ந்திட, ஜனநாயகம் என்றும் தழைத்திட தன்னை மெழுகுவத்திபோல் கழகம் அழித்துக் கொண்டது கழகத் தலைவர் கலைஞர் அரசியல் வஞ்சத்துக்கு ஆளானர். இத்தனைக்கும் பிறகுதான் இரண்டு உள்ளத்தோடுசெயல்படுகிருர் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய். இதைத்தான் அடுக்கடுக்கான ஆதாரங்களோடு நாடாளுமன்ற மேலவையில் ஆணித்தரமாக முழக்கமிட்டார் தோழர் இலட்சுமணன்.

ஒருதலை பட்சமான சர்க்காரியா அறிக்கை மீது நடவடிக்கை; அதுவும் புகாரைக் கொடுத்தவரைக் கொண்டு! ஆனல்ஊரே பேசுகின்றகாந்திபாய் தேசாய் ஊழல் மீது நடவடிக்கை இல்லையாம், ஊரே சிரிக்கிறது மொரார்ஜியின் முடிவு கண்டு.

இந்திக்கு இடம் கொடுத்தால்....?

நம்மைப்பார்த்துச் சிலர் 'தமிழ் வெறியர்கள்' என்கிருர்கள்; அவர்களுக்குச் சொல்லுகிறேன்-நாங்கள் இந்தியின் மீது ஆதிக்கம் செலுத்த எண்ணவில்லை என்று கூறுவதை அவர்கள் நன்ருகச் சிந்தித்துணர வேண்டும். தமிழிலே கார்டு, கவர்கள் அச்சடித்து வடநாட்டிலே கொடுத்தால், அந்த அஞ்சலகங்கள் அங்கு கொளுத்தப்படும்-அதிகாரிகள் கொல்லப்படுவார்கள். அந்த அளவுக்கு வடநாட்டில் மொழிவெறி நிறைந்திருக்கிறது என்பதையும் அவர்கள் உணரவேண்டும். உண்மையில் இந்தி திணிக்கப்பட்டு விட்ட இந்த நேரத்திலும் நாம் அறவழியில் நின்றுதான் நமது பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிருேம்.

இந்தி பிறந்த நாட்டில் எல்லா இடங்களிலும். எல்லா அலுவலகங்களிலும் இந்தியே இருக்கட்டும்; நாம் வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆனல், நமக்கு அந்த இந்தி ஒரு துளியும் வேண்டாம். இங்குள்ள தமிழக மக்களோடு தொடர்பு கொள்ளத் தமிழ் போதும்; பிற மாநிலத்தோடும், பிற நாட்டோடும் தொடர்பு கொள்ள ஆங்கிலம் போதும்!

தமிழ் வளம்நிறைந்த மொழி; இந்தி வளமில்லாத மொழி! இப்பொழுதுதான் ஒரு குழு அமைந்து இந்திக்கு வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிருர்கள். இப்படிப்பட்ட மொழியைக் கார்டிலும், கவரிலும் அச்சடித்து நம்மீது திணித்திருக்கிருர்கள்.

நமது அவசியத்துக்காக இந்தி இப்போது இங்கு வரவில்லை. இந்தி பேசுவோரின் ஆதிக்கத்தினை நிலைநாட்டவே அது வருகிறது; இதை நாம் எதிர்த்துத் தீரவேண்டும்.

நிறைய தினம் தமிழர்கள், தமிழ் நாட்டவர், தமிழ்மொழி என்ற எண்ணம் நம்மவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

நம்முடைய இனம் மூவேந்தர் ஆண்ட இனம்' தமிழ் மன்னர்கள் பர்மாவை வென்ருர்கள்; கடாரத்தை வென்ருர்கள்; கலிங்கத்தை வென்ருர்கள்; என்று கலிங்கத்துப் பரணி நமக்குச் சொல்லுகிறது, இவைகளையெல்லாம் படித்து, இவைகளையெல்லாம் தெரிந்து-இவைகளையெல்லாம் அறிந்து, நாம் வாழ்ந்தவர்கள்-நாம் ஆண்ட பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்ற நினைப்பு இன்னும் நமக்கு இருக்கிறது. இந்த நினைவு நமக்கு இருக்கக்கூடாது என்று வடக்கேயுள்ளவர்கள் முயற்சிக்கிருர்கள்.

தமிழ் அழிந்தால் தமிழ்நாடு அழியும். தமிழர் பண்பாடு அழியும். இந்தி வந்தால் தென்னட்டின் தனிச்சிறப்பே அழிந்துவிடும்.

—பேரறிஞர் அண்ணு
(1960)

கலைக் குழுக்களின் முகவரிகள்

தலைமைக் கழக அறிவிப்பு

கலைக்குழுவினரின் முகவரி கேட்டு ஏராளமான கழக அமைப்புகளிலிருந்து தலைமைக் கழகத்திற்கு கடிதங்கள் வந்த வண்ணமுள்ளன. அவர்களுக்கு வசதியாக கலைக் குழுக்களின் பட்டியல் ஒன்று இங்கு வெளியிடப்படுகிறது. இசை நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய விரும்புகின்ற நண்பர்கள் இந்தப் பட்டியலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

செ. கந்தப்பன்,
கொள்கை பரப்புச் செயலாளர் தி. மு. க.

நாகூர் அனிபா.
'அண்ணா இல்லம்' நாகூர்,
தஞ்சை மாவட்டம்.

பலகுரல் மன்னன்
சிவகங்கை சேதுராசன்,
185-ஏ. நந்தனம் விஸ்தரிப்பு,
சென்னை – 600035

பலகுரல் அரசு முருகு பாண்டியன்,
15, காந்தி சாலை, திருவாரூர்–610108.

மு. க. முத்து.
21 மயிலை ரங்கநாத முதலியார் தெரு,
தியாகராயநகர். சென்னை--600017.

மணி - சாமி கலைக்குழு
கலைஞர் படிப்பகம். இராசபாளையம்,
முகவை மாவட்டம்.

திருமதி விஜயா கலைக்குழு.
2, போயிஸ் சாலை முதல் தெரு,
வண்ணிய தேனும்பேட்டை,
சென்னை--600018.

ஆரூர் செந்தமிழன்,
தி. மு. க. கலைக்குழு;
ஆரூர் அஞ்சல், திருவாரூர் வட்டம்,
தஞ்சை மாவட்டம்.

முரசொலி முகிலன்.
தி. மு. க. கலைக்குழு. அத்திப்புலியூர்,
திருவாரூர்வட்டம், தஞ்சை மாவட்டம்.

தங்கராசு--மோகனா.
கலைநிகழ்ச்சிக் குழுவினர்,
பொ. தங்கராசு.
10, பூசாரி தோப்புத் தெரு,
மதுரை—625009

கே. ஆர். வேலுத்தங்கம்,
9--2. டாக்டர் கோபாலமேனன் தெரு,
கோடம்பாக்கம். சென்னை —600024.

டேப் ராதாமாணிக்கம் கலைக்குழு,
45. சி. பிளாக். பார்த்தசாரதி நகர்,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600021

திருச்சி மணியரசன் இயல் இசை நாடக மன்றம், 28, பிள்ளையார் கோயில்தெரு;
வண்ணிய தேனும்பேட்டை;
சென்னை – 600018.

ஆர். எஸ். பாலன் கலைக்குழு,
ஆர். 33-1. கோட்டூர்புரம்,
சென்னை--600085

இசைத்தென்றல் பாவா கலைக்குழு,
77, மேற்கு மாடவீதி,
காலடிப்பேட்டை, சென்னை--600019.

கலைஞர் நடமாடும் நாடக மன்றம்,
29, சுப்பராய செட்டித்தெரு.
1-வது சந்து; நம்மாள்வார்பேட்டை,
சென்னை –6000012.

மணியரசன் இயல்இசை நாடகமன்றம்,
பட்டுக்கோட்டை நீதி மோகன்,
தி. மு. க. பிரச்சாரக் கலைக்குழு,
61, திருநாவுக்கரசு முதலிதெரு,
பெரம்பூர். சென்னை —600011.

இராசப்பா கலைக்குழு,
15, இரண்டாவது சந்து,
பழைய ஆட்டுத்தொட்டி சாலை,
இராயபுரம். சென்னை – 600013.

பச்சையப்பன் கலைக்குழு.
ஆர். 64-18. கோட்டூர்புரம்,
சென்னை--600085.

'பலகுரல் வேந்தன்' இரா, ஆனந்தன்,
திரு. வி. க. குடியிருப்பு 'ஐ' பிளாக்
எண். 306, வண்ணியதேனும்பேட்டை,
சென்னை – 600018.

தேனிசை செல்லப்பா,
64-3. கோட்டூர்புரம். சென்னை--600085.

அயன்புரம் கோபால் கலைக்குழு.
38. சோமசுந்தரதேவர் 1-வது தெரு,
அயன்புரம், சென்னை -600023.

கூடலூர் கோட்டைசாமி கலைக்குழு
78 ஐயப்பச்செட்டித் தெரு மண்ணடி,
சென்னை —600001.

கே பி. ஜி. கலைக்குழு.
38. எஸ் எஸ் தேவர் 1-வது தெரு,
அயன்புரம். சென்னை--600023

இரா. கபிரியேல். சேரன் கலைக்குழு'
பெத்தி செட்டிபுரம், திருப்பூர்
கோவை மாவட்டம்

'பலகுரல்' க. பருக்-பாபு-புஷ்பரேகா,
தி. மு. க கலைக்குழு
20--3. இளங்கோ நகர்
சத்தி ரோடு கோவை--12.

'தியாக மறவன்' சிட்டிபாபு கலைக்குழு.
இரா. தேவராசு
6-வது வட்ட பிரச்சாரச் செயலாளர்,
புலியகுளம் கோயமுத்தூர்,

கே. ஆர். கருப்பையா.
'கரிகாலன் கலைக்குழு'
16, இஸ்மாயில்புரம் 12வது தெரு.
முனிச்சாலை மதுரை-625009.

கலைஞர் பித்தன்
ஆர். ஜி ஆர். ஜெயசித்ரா கலைக்குழு.
ஆர். ஜி ராசன்
மே.-பா. டி பி. கண்ணன்.
1, பரிசுச் சீட்டு விற்பனை நிலையம்
பேருந்து நிலையம் தஞ்சை.

மூர்த்தி-வாசன்-விஜயா-கலைக்குழுவினர்
என். டி. மூர்த்தி மே.பா. அ ப வேலன்,
முத்து தேநீர் நிலையம்,
வடக்குவாசல் அஞ்சல்), தஞ்சாவூர்.

பவுல்ராஜ்-கலையரசி கலைக்குழு.
ஆர். சி. தெரு வ. புதுப்பட்டி,
வத்திராயிருப்பு (வழி)
திருவில்லிபுத்தூர் வட்டம்,
முகவை மாவட்டம்.

கே. வி கே. சாமி கலைக்குழு.
தமிழரசன்-ஜெயந்தி,
486, கணேசபுரம், ஜார்ஜ் ரோடு,
தூத்துக்குடி, நெல்லை மாவட்டம்.

என் எஸ். கே. தாமு,
19-ஏ முதல் மெயின் ரோடு.
மேற்கு சி. ஐ டி. நகர். சென்னை-600035.

டி. செல்வராசன் கலைக்குழு;
104-பி. தட்டான் மலைத் தெரு,
பெரிய நத்தம் அஞ்சல்,
செங்கற்பட்டு மாவட்டம்.

டி. எம். தங்கப்பன் கலைக்குழு;
338. டபிள்யூ பிளாக்,
பூபதிநகர். கோடம்பாக்கம்,
சென்னை-600024.

'இசைக்குழு' எம். சுந்தரம்.
நெடுங்கண்டம், இடுக்கி ஜில்லா,
கேரள மாநிலம்.

'கலைஞர் கலைக்குழு'
திருமதி. டி. என். ஜெயா,
டைப் 1 பிளாக் 5-8.
துப்பாக்கித் தொழிற்சாலை அகநகர்,
திருச்சி--16

பொன்மலை புலிபரசன் அண்டு புஷ்பா,
கலைஞர் நற்பணி மன்றம்,
பள்ளிவாசல் மே. க. கோட்டை,
திருச்சி--620011.

கலைக்குழு, ஏ வி கிருஷ்ணமூர்த்தி,
3 பெரிய சௌராஷ்டிரா தெரு
திருச்சி--620008.

ஆடலரசன்-விஜயா-கலைக்குழு,
73 சின்ன கம்மாளத் தெரு,
திருச்சி-.620008.

எஸ் எம். சேவியர் துரை.
சிக்கத்தம்பூர் பாளையம்
துறையூர் வட்டம் திருச்சி-621008.

மணிவாணன்--மீனா,
கலைஞர் கலைக்குழு
52. ரெங்கநாதம்பிள்ளைத் தெரு.
கிச்சிப்பாளையம், சேலம்--636001.

இரா. நன்மாறன்-கலைக்குழு
1-50 துளசிங்கமுதலி தெரு,
பெரம்பூர். சென்னை-11

டேப் காசிநாதன்
6. தியம்பாக்கம் மாதவரம் ஒன்றியம்,
சென்னை-600052.
தஞ்சை ஆர் ஜி மலர்விழி.

கலைக்குழு ஆ. வி இராசன்,
மே. பா. சாமிநாதன்,
அமிர்தம் ஒலி-ஒளி நிலையம்,
கீழவாசல் தஞ்சை மாவட்டம்.

தென்னவர் கலைக்குழு
எம். ஆர் சேகர்
30 ஜோன்ஸ்சசாலை சென்னை-600015.

கருணை நிதி கலைக்குழு,
அ. பொ. ம. கலைச்செழியன்
நெ 881--143 29-வது குறுக்குத் தெரு,
டி. பி. சத்திரம். சென்னை-600030.

எஸ் டி. நடராசன்
உதயசூரியன் கலைக்குழு;
சாந்தி லாட்ஜ், திண்டுக்கல் ரோடு,
மதுரை–1.

தியாக மறவன் சிட்டிபாபு கலைக்குழு,
வ. ஸ்டாலின்
பாவலர் இல்லம், பண்ணைப்புரம் அஞ்சல்.
மதுரை மாவட்டம்.

'நிறவெறி'க்கு முடிவில்லையா?

நிறவெறி கோரத் தாண்டவமாடும் நாடு, தென்னாப்பிரிக்கா. அங்கிருக்கும் ஜோஹன்ஸ்பர்க் நகரிலுள்ள மருத்துவ விடுதி ஒன்றுக்கு, கடுமையாக நோயுற்றிருந்த ஒரு தொழிலாளி எடுத்துச் செல்லப்பட்டார்.

அந்தத் தொழிலாளி 'கறுப்பர்' என்பதனால் மருத்துவ விடுதியில் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டது வெள்ளையர் நிர்வாகம்.

உடனே- நோயுற்ற தொழிலாளர் நன்றாகக் குளித்தார்; பல மாதங்களாகக் குளிக்காததால் அவர் உடம்பில் படிந்திருந்த அழுக்கும், தூசியும் அகற்றப்பட்டன.

அப்போது- அவர் ஒரு 'கறுப்பர்' அல்லர், 'வெள்ளை'யர் தான் என்பது தெரிய வந்தது.

நிர்வாகமும் அவரை மருத்துவ விடுதியில் சேர்த்துக் கொண்டதாம்!

எம். ஜி. ஆருக்கு ஒரு கேள்வி!

"தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார், சாதி வேற்றுமை பாராதவர் என்றால் தமது பெயருடன் 'மூப்பனார்' என்னும் சாதிப் பட்டத்தைப் போட்டுக் கொள்ளலாமா?

இப்படிக் கேட்டிருக்கிறார் எம்.ஜி.ஆர்.!

நல்லகேள்விதான் — கேட்க வேண்டிய கேள்விதான்]

எம். ஜி ஆருக்குப் பதில் சொல்லவேண்டியவர் மூப்பனாரே தவிர நாமல்ல.

ஆனால், எம் ஜி. ஆருக்கு ஒரு கேள்வி. உங்கள் கட்சியில் மாயத்தேவர் என்று ஒருவர் இருக்கிறாரே, அவரிடம் இத்தக் கேள்வியை நீங்கள் கேட்டதுண்டா?

அவரைத் தேர்தலில் நிறுத்திய போதாவது தேவர் என்ற பட்டத்தைச் சேர்க்காமல், வெறும் 'மாயன்' என்றே சொல்லி நீங்கள் ஓட்டுக் கேட்டதுண்டா?

உங்கள் மந்திரி சபையிலேயே ஒரு 'முதலியார்' இருக்கிறாரே அவரைக் கேட்டதுண்டா?

அதிருக்கட்டும், நீர் மதுரையில் மூப்பனாரை இடித்துரைத்துப் பேசிய கூட்டத்துக்குத் தலைமை வகித்தாரே பால குருவா ரெட்டியார் என்னும் உங்கள் கட்சியின் முன்னணி வீரர், அவரிடமாவது சாதிப்பட்டத்தை விட்டொழிக்குமாறு கூறியதுண்டா?

உமது கட்சி ஏடுகளிலாவது மேற்சொன்ன மூவர் பெயரும் சாதிப்பட்டமில்லாமல் வெளிவருவதுண்டா?

சாதிப்பட்டத்தை விடாது ஒட்டிக்கொண்டிருக்கும் உங்கள் கட்சிப் பிரமுகர்கள் இன்னும் எத்தனையோ பேர் இருக்கிறார்களே. அவர்களின் பட்டியல் தேவையா?

சொந்தக் கட்சியில் உள்ளவர்களைத் திருத்த வக்கில்லாமல் மற்றொரு கட்சித் தலைவரை இடித்துரைக்க உமக்கு என்ன யோக்கியாதை இருக்கிறது?

இப்படிப் பேசியவர் இப்போது எங்கே?

கீழே உள்ளவற்றை ஒரு முறை படியுங்கள்; படித்துவிட்டு இவற்றையெல்லாம் பேசியவர் யார் என்று கூறமுடியுமா பாருங்கள். முடியாவிட்டால் கடைசியில் காணுங்கள் விடையை!

"திராவிட முன்னேற்றக் கழகத்தை மிரட்டுவதற்குப் போடப்பட்ட சர்க்காரியா கமிஷன் ஆய்வு செல்லரித்துப் போன குப்பைத் தொட்டியில் கிடக்கின்ற மஞ்சள் காகிதம் அதை வைத்துக் கொண்டு எங்களை பயமுறுத்தலாம் என்று தப்புக் கணக்குப் போடாதீர்'

திருவல்லிக்கேணிப் பேச்சு
21-12-77 முரசொலி

'எந்தக் குற்றச் சாட்டாவது கருணாநிதி லஞ்சம் வாங்கினார் என்று நேரிடையாகச் சொன்ன குற்றச்சாட்டு-- ஒரு எடுத்துக் காட்டு- சர்க்காரியா சொல்லி இருக்கிறாரா? எழுதி இருக்கிற முழு ரிப்போர்ட்டையும் படித்து விட்டுச் சொல்கிறேன். நடந்திருக்கக் கூடும், இருந்திருக்கக் கூடும் இப்படித்தான் எழுதியிருக்கிறார். இதைத் தவிர வேறு எதுவுமே இல்லை சர்க்காரியா கமிஷன் என்ன செய்து விடப் போகிறது?'

திருவல்லிக்கேணி வெங்கட் ரங்கபிள்ளைத் தெருப்பேச்சு
6–6–78 முரசொலி

"கோகுல் ஓட்டல் 17-ம் எண் அறையில், சென்னை சட்டமன்ற உறுப்பினர் விடுதி 317-ம் எண் அறையில் எந்தெந்த மந்திரிகள் என்னென்ன குடித்நாரிகள் என்ற கதையைத் கூறவா? தங்கள் கார்கூடத் தெரியாமல் இன்னொருவர் காரில் ஏறிக் கொண்டு தடுமாறியவர்கள் துர்பாக்கியமாக நாட்டிய மந்திரியாகி இருக்கிறார்கள் நெடுநாள் தாங்காது. நீங்கள் தாக்குப் பிடிக்க முடியாது எச்சரிக்கை செய்கிறேன்'

திருவல்லிக்கேணி கூட்டத்தில் பேசியது 30–1–78
வெளியூர் பதிப்பு

"தமிழ்நாட்டு உழவனின் நெல்லுக்கு நியாய விலை தர மறுப்போர் ஒரிசாவுக்கும், அரியானாவுக்கும் சென்று அதிகவிலை தந்து கொள்முதல் செய்தது ஏன்? டெண்டர் கோராமல்தன்னிச்சை பாக— சோளம், கம்பு, கேழ்வரகு விற்றதால் உணவுத்துறைக்கு ரூ 5 கோடி நட்டம்''

அ. தி மு. க. அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தின் போது சட்டமன்றத்தில் பேசியது)

7–1–78 முரசொலி

அக்கிரமம் நடந்துள்ளதாக சாட்சியங்கள் கூறியும் சீராளன் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளைக் கைதுசெய்யாதது ஏன்?

தியாகராயநகர் பேச்சு
2–2–78 முரசொலி
(வெளியூர் பதிப்பு)

'தி மு. கழகத்தை அழிக்க எவரும் பிறக்கவில்லை! தமிழ் தமிழர் நலன் காக்க எந்தக் களத்தையும் சந்திக்கத்தயார்.

தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழாவில் பேசிய பேச்சு
6–6–78 முரசொலி
(வெளியூர் பதிப்பு)

'வாதத்திற்கு மருந்துண்டு. ஆனால் பிடிவாதத்திற்கு மருந்தில்லை என்பார்கள் பைத்தியத்தைத் திருத்த வைத்தியம் உண்டு ஆனால் பிடிவாதத்தை கௌரவப் பிரச்சினையாகக் கொண்டு விட்ட எவரையும் திருத்துவதென்பது இயலாத காரியம் (கைதியின் கடிதம் சிறுகதையில்)

மேற்கண்டவாறு பேசியவர் எழுதியவர் இப்பொழுது நமது கழகத்தில் இல்லை. கடைசியாக 'ஞானஸ்கானம் பெற்று நடிகர் கட்சி மேடையேறிக் கலைஞரையும், கழகத்தையும் சாட ஆரம்பித்திருக்கிறாரே அவர்தான்! புரிகிறதா? அண்ணாமலைக்கு அரோ...கரா!

—செங்கை கதிரவன்

எம். ஜி. ஆரின் சாதிப்பற்று

மூப்பனார் அம்பலப்படுத்துகிறார்!

முதன் மந்திரி எம். ஜி. ஆர் மதுரையில் என் பெயரிலுள்ள மூப்பனார் என்ற சாதிப் பட்டத்தைக் குறிப்பிட்டு, மூப்பனார் தமது சாதிப் பட்டத்தை விடுவாரா என்று பேசினாராம்.

'மூப்பனார்' என்பது குடும்ப ரீதியாக பல ஆண்டுகளாகக் குடும்ப வழக்கத்தில் இருந்து வருகிறது நான் ஜாதிபற்றிக் கவலைப்படுவதில்லை, அதை ஜாதியாகவும் நான் கருதுவதில்லை.

ஆனால் முதல் மந்திரி எம். ஜி, ராமச்சந்திரன் தன் ஜாதி என்ன என்பதை நிலை நிறுத்திக் கொள்ள எவ்வளவு முயற்சித்திருக்கிறார் என்பதை மக்கள் உணர வேண்டும்.

சென்ற ஆண்டு மயிலை கற்பகம்பாள் மண்டபத்தில் மா. பொ. சி. பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்ட எம். ஜி, ஆர். தான் மன்றாடியார் பரம்பரை என்றும், கவுண்டர் இனத்தில் வந்தவர் என்றும் தன் ஜாதியை நிலைநிறுத்திக் கொள்ள எவ்வளவு மெனக்கட்டுப் பேசினார் என்பதை அந்த விழா மேடையில் அமர்ந்து நானும் கேட்டிருந்தேன். அப்படிப்பட்ட எம். ஜி. ஆரா பெரியார் பாசறையில் பயின்றவர் - அண்ணா வழியில் பெரியார் பாதையில் நடப்பவர் என்று மேடையில் இருந்த நான் வெட்கப்பட்டேன்.

கருப்பையா மூப்பனார்
(சென்னை தியாகராய நகர், பொதுக் கூட்டத்தில் கூறியது)

நம்மவர்களை ஏமாற்றுபவர் யார்?

அன்புள்ள 'நம்நாடு' ஆசிரியர் அவர்களுக்கு

குமுதம் இதழுக்கு நான் எழுதியுள்ள கடிதத்தின் நகலைத் தங்கள் பார்வைக்கு அனுப்பி வைக்கிறேன் அதுவருமாறு —

தங்களின் 13–7–78 ஆம் தேதி குமுதம் இதழில் இரண்டாவது பக்கத்தில் மொழி அறிஞர் திரு தேவநேயப்பாவாணர் அவர்களின் புகைப் படமொன்றைப் பிரசுரித்து, 'நம்மை நம்மவன்தான் ஏமாற்றுகிறான்.' என்று தலைப்பிட்டு சாத்தப்பன் என்பவர் தங்களுக்கு அனுப்பியதாக உள்ள அந்தப் பக்கச் செய்திகளை நான் படித்துப் பார்த்தேன். சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற தமிழ் அறிஞர்கள் மாநாட்டில் "ஆரிய" (பிராமணீய) எதிர்ப்புக் கருத்துக்களை அள்ளித் தெளித்ததாகவும்; குறிப்பிட்டு சில துளிகளையும் பிரசுரித்து இருந்தீர்கள். இறுதியாக கலைஞர் அவர்கள் அந்தக் கூட்டத்திற்கு வராத ஒரே ஒரு காரணத்திற்காக 'நம்மை நம்மவன்தான் ஏமாற்றுகிறான்' என்று சூசகமாகத் தலைப்பிட்டு எழுதியுள்ளதை எந்தத் திராவிட உணர்வுள்ளவனும் புரிந்து கொள்வான் இந்தத் தலைப்பில் இருந்து கலைஞர் மீது தங்களுக்கு இருக்கக் கூடிய வெறுப்பும், தாங்கள் மேற்சொன்ன இனத்திற்கு எவ்வளவு விசுவாசமுள்ளவராக இருக்கிறீர்கள் என்பதும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது

ஒரு கூட்ட நிகழ்ச்சிக்குக் கடைசி நேரத்தில் வரமுடியாத சூழ்நிலை ஏற்படுவது என்பது ஒரு சாதாரண பேச்சாளருக்குக்கூட ஏற்படக் கூடிய ஒரு சாதாரண நிகழ்ச்சியாகும். அப்படி இருக்க 'தமிழர்களின் தனிப்பெரும் சக்தியாக இன்றைக்கு விளங்கக் கூடியவர் கலைஞர் அவர்கள், அந்தக் கூட்டத்திற்கு வர இயலாமைக்கு அவரின் சூழ்நிலைகள் காரணமாக இருக்கலாம். கலைஞர் மீது பொய் வழக்குகள் ஜோடிக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தான் சம்மதம் தெரிவித்த ஒரு கூட்ட நிகழ்ச்சிக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்படுவது என்பது மிகவும் சாதாரணமானதாகும் அவர் ஒரு அரசியல்வாதி; அவர் ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர். திராவிட இனத்திற்காக-தமிழ் மக்களுக்காக—தமிழுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு கடமை ஆற்றிவரும் கடமைச் செம்மல் அவர்.

வந்த மடல்

"நம்மவரை நம்மவரே ஏமாற்றுகிறார்' என்றுதான் பெருஞ்சித்திரனார் பேசியதாகப் பிரசுரித்துள்ளீர்கள். ஆனால் தலைப்போ 'நம்மை நம்மவன்தான் ஏமாற்றுகிறான்"— என்று 'ர்—ஐ 'ன் ஆக்கிக் கொடுத்திருப்பதிலிருந்து, தங்கள் உணர்வுகளில் தமிழ் இன எந்த அளவுக்கு விரோதம் இருக்கிறது என்பதை தன்மானமுள்ள திராவிடன் என்றும் புரிந்து கொள்ளாமல் இருக்க மாட்டான்

திராவிடனின் தன்மான உயர் நிலையை தந்தை பெரியாருக்குப்பின்பு எழுச்சி கொள்ளச் செய்து கொண்டிருக்கிற ஒரே தலைவர் கலைஞர் என்பதை இன்று தமிழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது தமிழினப் பகைவர்களுக்கு வால் பிடித்துத் திரியும் தங்களைப் போன்றவர்கள் திராவிடத்துக்கு உயர்வு கொடுக்க விரும்பவில்லை என்றாலும் உபத்திரவம் கொடுக்காமல் இருக்கக்கூடாதா?

வெ து. அரசு
மதுரை.

இதனை நம்புங்கள்!

'சகரமன்னன் என்பவனின் விந்துவினை ஓர் சுரைக்குடுக்கையினுள் வைத்து பாதுகாத்து "60000" குழந்தைகளை உற்பத்தி செய்ததாக வால்மீகி இராமயணத்தில் உள்ளது" என்கிறார் இந்திய இராமாயண சங்கத் தலைவர் சப்பூகமகராஜ்

தகவல்: மாடா பால்ராஜ்
காரைக்குடி

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

புனித ராஜ்யம்...

(முதற் பக்கத் தொடர்ச்சி)

குவா! குவா! சப்தம் கேட்டிருக்கும் சார்!

எஸ். பி : உஸ்! சும்மா இருப்பா!... [வெளியிலிருந்து காலிங் மணி அடிக்கிறது]

எஸ். பி : யார் என்று பார்! [காவலர் வெளியில் சென்று திரும்பி வந்து]

காவலர் : சார்! பெயர் அண்ணாச்சியாம் - புனித ராஜ்யத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவராம்... தங்களைப் பார்க்க வேண்டுமாம்... (சொல்லிக் கொண்டிருக்கும் போதே அண்ணாச்சி உள்ளே வந்து விடுகிறான்)

அண்ணாச்சி : மிஸ்டர் எஸ். பி. சார்! வணக்கம். நம்ப ஊர் நல்லான் மாரடைப்பிலே மரண மடைந்தது சம்பந்தமாக... யாரோ உங்களுக்குத் தவறானதகவல் கொடுத்து...

எஸ். பி : அதிருக்கட்டும், நீங்கள் யார்?

அண்ணாச்சி : என்னைத் தெரியாதா? கேள்விப் பட்டது கூடக் கிடையாதா? அண்ணாச்சி என் பெயர்!

எஸ் பி : ஓ! அந்த அண்ணாச்சியா? நல்லான் கொலை சம்பந்தமாக உங்கள் மீது தானே புகார் கூறப்பட்டது...

அண்ணாச்சி : கொலையாவது ஒண்ணாவது - அது சாதாரண இயற்கையான சாவு!

எஸ் பி : இல்லை என்கிறேன் நான்.

அண்ணாச்சி : ஆமாம் என்கிறேன் நான். செத்தவனைச் சுடுகாட்டில் வச்சு கொளுத்தியாச்சு!

எஸ் பி : என்ன?

அண்ணாச்சி : ஒரு மரியாதைக்காக உம்மைப் பார்த்துச் சொல்லிட்டுப் போக வந்தேன் அவ்வளவுதான். தேவையில்லாமல் அலட்டிக்கொள்ள வேண்டாம், சிகரெட்! (சிகரெட் தேவையா? என்ற பாவனையில் சிகரெட் டப்பாவை நீட்டுகிறான்)

எஸ் பி. : (வேண்டமென்று தலையை அசைத்தவாறு) மிஸ்டர் அண்ணாச்சி! ஒருபோலீஸ் அதிகாரியுடன் எப்படி நடந்து கொள்வது என்பது கூட உமக்குப் புரியவில்லை. தயவு செய்து போகலாம்! நான் என் கடமையைச் செய்தாக வேண்டும்.

அண்ணாச்சி : எஸ். பி. சார்! சொக்கி என்று ஒருத்தி உமக்கு ‘போன்’ செய்திருப்பாள்! அவள் சொன்னதெல்லாம்பொய். நம்பாதீர்கள்! நான் சொன்னதை மீறி ஏதாவது நடந்தால்... நினைவிருக்கட்டும், நடப்பது புனிதராஜ்யம்! உமது வேலை காலியாகிவிடும்... வருகிறேன். [அண்ணாச்சி போனதும். எஸ். பி. குழப்பமான நிலையில் சிறிது நடக்கிறார். பிறகு ஒரு திடமான முடிவுடன் தாளை எடுத்து ஏதோ எழுதிக் கவரில் போட்டுக் காவலரிடம் கொடுக்கிறார்.)

காவலர் : என்ன சார் இது?

எஸ் பி. : என் ராஜினமாக் கடிதம்! போஸ்ட் செய்து விடு...

காவலர் : சார்! சார்! [எஸ் பி ஆபிசிலிருந்து வெளியேறுகிறார்]

[திரை விழுகிறது]

விரைவில் தொடங்குகிறது
‘ஊழ் வினை’
தென்னரசு எழுதும் மற்றொரு
உண்மைக் கதை

நம்பிக்கை நழுவுகிறது!

எஸ். பி. சற்குணம் பி. ஏ.

இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு அமைந்த அரசியல் நிர்ணய சபையானது அரசியல் சாசனத்தில் கீழ் வரும் ‘பீடிகை பற்றி விவாதிக்கின்றது.

“சமூக அரசியல் பொருளாதார அம்சங்களில் சமநீதியையும், சிந்தனை செயல், நம்பிக்கை வழிபாடு ஆகியவைகளின் சுதந்திரத்தையும் சமவாய்ப்புகளையும் சம அந்தஸ்தையும் எல்லா மக்களுக்கும் உறுதிபடுத்தும் இத்தீர்மானத்தை இந்திய மக்களாகிய நாம் நிறைவேற்றுகிறோம்.”

இதன்மீது பேசிய டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இத்தீர்மானத்தில் உண்மையும் நம்பிக்கையும் வைக்கவேண்டுமானால் சமூக அரசியல், பொருளாதார நீதியை நடைமுறையில் சாத்தியமாக்குவதற்கு தேசத்திற்கு வழி செய்யும் வகையில் ஒரு வாசகம் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும் என்றார்.

“சமூக அரசியல் பொருளாதார நீதியை நிலைபெறச் செய்ய தொழில்களையும் நிலங்களையும் தேசிய மயமாக்குவதற்கு இந்தத் தேசத்தால் முடியும் என்று தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்” என்று வலியுறுத்தினார் டாக்டர் அம்பேத்கார்.

(முன்னாள் தமிழ்நாடு காங்கமிட்டித் தலைவர் திரு ராகிருஷ்ணசாமி நாயுடு எழுதியுள்ள நேருவின் மணி வாசகம்’ என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது)

அன்றைக்கே அந்த உறுதியைத் தரமுடியாமல் தயங்கியவர்கள்தான் சுதந்திரம்பெற்று முப்பது ஆண்டுகள் ஆனபின்னும் இன்னும் தெளிவாகச் சொல்ல முடியாமல் தவிக்கின்றார்கள்.

ஆனால் அண்ணல் அம்பேத்காரின் ஆசையை நிறைவேற்றுகின்ற வண்ணம் தமிழகத்தில் அமைந்த தி. மு. க. அரசுதான் பஸ்களைத் தேசியமயமாக்கியது. சக்தி மைப் நிறுவனத்தை நாட்டுடைமை ஆக்கியது. போக்குவரத்துத் துறையில் ஊக்க போனஸ் தந்தும். போக்குவரத்து நிர்வாகத்தில் தொழிலாளரைப் பங்குபெறச் செய்யவும் சட்டமியற்றி மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பி வைத்தும் கலைஞரசுதான்.

பிறருக்காக வாழ்ந்த வர்க்கத்தை, தனக்காக வாழும் வர்க்கமாக மாற்றும் பணியில் ஈடுபட்ட மார்க்சின் சொந்தக்காரர்கள் சொரணை இல்லாமல் தனக்காக வாழ்ந்த தொழிலாளர் வர்க்கத்தை முதலாளிக்காகவே வாழ வகை செய்யும் ஊதிய முடக்கச் சட்டம் போனஸ் ஒழிப்புச் சட்டம் கொணர்ந்தவர்களின் நிழலில் நின்றிருந்த நெருக்கடி கால நிலையை எண்ணிப் பார்க்கின்றோம்.

தத்துவத்திலும் அரசியல் நீதியிலும் தொழிலாளர் வர்க்கத்தை முதலாளி வர்க்கம் உபகருவியாக—கையாளாக ஆக்கும் முயற்சிகளை எதிர்த்துப் போராடி அரைகுறை சோசலிச சித்தாந்தங்களை தகர்த்தெறிந்தவன் மார்க்ஸ். சம்பளப் பாதுகாப்பாக சிதறிக் கிடந்த தொழிலாளர் இனம் ஒன்றுபட்டு முதலாளித்துவத்தை எதிர்த்திட சங்கம் காணவும் அதைப் பேணவும், தத்துவம்கூறியவன் மார்க்ஸ்— அவனின் தத்துவத்தைபிரௌதன் என்பவன் ((Browthan) எதிர்த்தான்;

கூலி உயர்வு என்பது

பொருளின் அடக்கவிலையை உயர்த்திடும் விலைவாசி உயர்வு ஏற்படுத்தும்’ எனவே கூலி உயர்வு தடுக்கப்பட வேண்டும் வேலை நிறுத்தம் வீண்? சட்ட விரோதம்! என்று விதண்டா வாதம் புரிந்தான் பிரௌதன். அவனுடைய பாதையில் நேருவின் புத்திரி நெருக்கடி காலத்தில் தொழிலாளரின் உரிமையைப் பறித்திட்டார்.

ஊதிய முடக்கம் மூலம் விலைவாசி குறைந்ததா?

போனஸ் மறுப்பு மூலம் புதிய தொழில்கள் தோன்றினவா?

இன்று தமிழ்நாட்டு அரசின் முதல்வர், தொழிலாளியாகத் தாம் நடித்து உரிமைக் குரல் ஒலித்ததை யெல்லாம் வெறும் வேடம் என்று தாமே உறுதி செய்யும் வகையில் வேலை நிறுத்தம் செய்தால் தொழிலாளிக்கு ஓராண்டு கடுங்காவல் ரூபா 2000 அபராதம் என்று அவசரச் சட்டத்தைப் போட்டிருக்கிறாரே!

அன்று இந்திரா அம்மையாருக்கு ஆலவட்டம் சுற்றியவர்களும் சரி இன்று தமிழகத்தை ஆளும் திரையுலக சின்னவருக்கு வெண் சாமரம் வீசுபவர்களும் சரி தொழிலாளர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாகிவிட முடியுமா? தொழிலாளர் விரோதப் போக்கினை எதிர்த்துக் குரல் எழுப்பியும், பேரணி நடத்தியும் எச்சரிக்கை செய்துள்ள எதிர்க்கட்சி வரிசை கலைஞர் அணியினருடையதே!

சமூகத் துறையில் சமநீதியைப் பெற தீண்டாமையைப் போக்கிட வேண்டும் என்பதில் தீராக் காதல் கொண்ட காந்தியார் ஒரு முறை கல்கத்தாவிலிருந்து சென்னை வரும் வழியில் அவரை ஒரிசாவில் இறங்கிப் பேசுமாறு வேண்டினர். மறுத்திட்டார் ஆந்திராவில் இறங்கிப்பேசுமாறுவேண்டினர். மறுத்திட்டார். பெங்களூரில் ஒரு லட்ச ரூபாய் நிதியும் அளிப்பதாகக் கூறி வேண்டினர் மறுத்திட்டார். நேரே மதுரை சென்று பிறகு பழனியும் சென்று மீண்டார். காரணம்: கடவுளின் குழந்தைகள் என்ற பொருளில் காந்தியாரால் அழைக்கப்பட்ட அரிஜன தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலயத்துள் நுழைய அனுமதி கிடைத்ததைப் பாராட்டிடவே மதுரையும் பழனியும் நாடி வந்தார்; அங்கே பிரார்த்தனையும் நடத்தினர்.

அந்த அரிசன தாழ்த்தப்பட்ட ஒதுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தொடர்ந்து சேவையை ஆற்றி வந்தது கழக ஆட்சியன்றோ? பிலா மாளிகையில் தங்கியிருப்பதைக் காட்டிலும “தோட்டிகள்’ மத்தியில் வாழ்வதைத்தான் பெருமையாகக் கருதுகின்றேன். என்றவர் காந்தியார். தொழு நோயாளிகள் வாழும் இல்லம் தான் “எனது யாத்திரை தலம்’ என்று சொன்னவர் நம் தலைவர் கலைஞரன்றோ?

‘ஈனப் பறையர்களேனும்
அவர் எம்முடன் வாழ்ந்திங்
கிருப்பவர் அன்றோ
வேதியராயினும் ஒன்றே
இன்றி வேறு குலத்தின
ராயினும ஒன்றே’

பறையர் என்றும் வேதியர், என்றும் அர் விகுதி கொடுத்து அன்று பாடிய பாரதியாரின் வாக்கினை நிலை நாட்டிடப் பறையன் என்ற விதியில் மாற்றம் செய்து பறையர் என்ற மதிப்பை அளித்துச் சட்டம் இயற்றியவர் தமிழவேள் கலைஞரல்லவா?

ஆலயத்துள் அர்ச்சகராகப் பொறுப்பேற்று ஆண்டவனுக்கு ஆறு கால பூசையும் செய்யும் தகுதி ஆதித்திராவிடனுக்கு அளித்திட வேண்டும் என்று சட்டத்தில் திருத்தம் வேண்டி துணிந்து போராடிக்கொண்டிருப்பவர் பகுத்தறிவுத் தந்தையின் நெஞ்சத்தில் நிலயாய் நின்றிட்ட கலைஞரல்லவா’

இன்று ஆண்டவனிடத்துக்கே ஆதிதிராவிடரை அனுப்பி வைக்கின்றோம என்று விழுப்புரத்தில் புரட்சி நடத்திட இடமளித்து விட்டிருக்கிறார் புதிய தமிழக முதல்வர். மக்கள் எந்த நேரத்தில் ஏற்றம் கொண்டோர் தாழ்ந்த குல மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடடால் தன் மேனி எழில் குறைந்திடாது பார்த்துக் கொள்வதிலும், தன் குடும்பம் தாழாது பார்த்துக் கொள்வதிலும், தன் வருவாயை எப்படியும் பெருக்கிக் கொள்வதிலும் வழி தேடும் “வள்ளல்’ மீது வைத்துள்ள நம்பிக்கை நழுவுகின்றது. தன்னலம் சுருக்கி, கழக நலம் பெருக்கி; நாடாண்ட கலைஞர் வழி நாடி மக்கள் அணி அலையெனத் திரண்டு வருகின்றது.

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல்நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பத்தவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமிசன்னதி
72. அழகர்கோவில் சாலை, 72. CL வன்ஹான்ரோடு, மதுரை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால். அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; ‘அன்பகம்’ 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009